Reg. No. M. 1482.

ஸமரஸபோதினி.

The "Samarasabodhini"-A Tamil Weekly

Published in Tanjore, devoted to Politics, Education, Industry, Agriculture & Village improvement. etc.,

"தேரிந்த வினத்தோடு தேர்ந்தேண்ணிச் செய்வார்க்
கரும் போருள் யாதோன்றுமில்."

"எண்ணிய வெண்ணியாங் கெய்துப வெண்ணியார்
திண்ணியராகப் பெறின்."

இ. சூரியநாராயண ஐயர் பி. ஏ., பி. எல்., பத்திராதிபர்.

E. Suryanarayana Aiyar B. A., B. L., Editor

புத்தகம் 1. | ரௌத்ரிஃஸ ஆவணிமீ ௩௰௨ புதன்கிழமை **15th Sep. 1920.** தஞ்சாவூர். | பிரதி 14.

ஸமரஸ போதினி.

சந்தா விவரம்:-

இந்திபா, பர்மா, சிலோன் முதலிய விடங்களுக்கு	ரூ 5—0—0
ஆறுமாதங்களுக்கு	ரூ 3—0—0
பினங்கு, சிங்கப்பூர், முதலிய விடங்களுக்கு	ரூ 7—0—0
ஆறுமாதங்களுக்கு	ரூ 4—0—0
தனிப் பிரதி விலை	ரூ 0—2—0

விளம்பர விகிதம்:-

பத்தி 1க்கு மாதம் 1க்கு	ரூ 20—0—0
4 insertions per month per column	Rs. 20—0—0

3 மாதங்களுக்குக் குறையாமல் விளம்பரம் ஒப்பந்தம் செய்து கொள்பவர்களிடம் மிகவும் குறைந்த விகிதம் வாங்கப்படும்.

Kerosine Gas Stoves.

கியாஸ் அடுப்புகள்.

இதன் உபயோகம் அவசியமென்பது ஜனங்கள் அறிந்த விஷயம். தனி சாமான்களும் கிடைக்கும். கியாட்லாக் இனும்.

கோரனஸ்ட்வ் நே. 5. ரூ **14-0-0.**

ஸன் கம்பெனி, தஞ்சாவூர்.

"The Young India."

A high class English weekly edited by Mahatma Ghandi. Only Rupees five per year. Oh! Sons & Daughters of Ind! Subscribe by thousands. In helping it you help yourselves.

The Manager, **Young India.**
Ahmedabad.

INDIA'S FREEDOM
WAS
ALWAYS BOUND UP
WITH THE ADOPTION OF SWADESHI
(*Ghandi.*)
THEREFORE.
LOVE.
PATRONIZE SWADESHI.
YOU CAN GET WHAT YOU WANT AT

ORIENTAL WAREHOUSE.
AIYENKADAI STREET.
TANJORE.

The place Where Most People Trade, Where Goods Are Cheap. Watch our Advertisment Call & See.

O-R-I-E-N-T-A-L-W-A-R-E
H-O-U-S-E.

"வைசிய மித்திரன்."

இது காரைக்குடியினின்றும் வாரந்தோறும் அருமையான விஷயங்களுடன் ராயல்ஸைஸில் வெளிவரும் ஒரு வாராந்தத் தமிழ்ப் பத்திரிகையாகும். இது வியாபார விருத்திக் குரிய விஷயங்கள், கைத்தொழிற் குறிப்பு, விவசாய நுட்பம், வினோதக்குறிப்பு, அந்நிய வர்த்தமானம், பொது வர்த்தமானம், இராஜாங்க சமாச்சாரம், ஆகிய இவ்விஷயங்களுடன் வெளி வருகிறது. இந்திய மக்களுக்குப் "புதிய ஊக்கமும், செல்வப்பெருக்கம் வளருமாறு, பற்பல ஆராய்ச்சி வியாசங்கள், ராஜதந்திர நுட்பங்கள்" இவற்றை வெகு அழகாக எடுத்துப் போதித்து வருகின்ற இப்பத்திரிகையானது ஒவ்வொரு தமிழராலும் படிக்கத்தக்கதெனப் பல பத்திரிகைகளாலும் புகழப்படுகின்றது. இந்தியாவுக்கு வருட சந்தா ரூபாய் 5-0-0 (ரூபாய் ஐந்தே) வெளி நாடுகளுக்கு ரூபாய் 6-0-0.

மானேஜர்,
"வைசிய மித்திரன்" காரைக்குடி.

சர்வஜன மித்திரன்.

வாரம் இருமுறை புதன் சனிக்கிழமைகளில் வெளிவரும்.

சீர்வளம் நிலவள மலிந்த பினங்கின் கண் வந்துலாவும் நமது இந்திய வாசிகளின் முன்னேற்றத்தையும் கல்வியபிவிருத்தியையும் உள்ளத்திலூன்றி அன்னவர்கள் பாஷாபிமானம் ஜனாபிமானம் மதாபிமானமபூண்டு சமூக வாழ்வில் நற்பெயரெய்தவும் அரசாங்க வர்க்கத்தினர் பால் விசுவாசம் படைத்தொழுகவும் உலகின் கண் ஆங்காங்கு நடைபெறும் சமாச்சாரங்களை எளிதிலுணரவும் வேதம், வைதீகம், வேதாந்தம், சித்தாந்தம் சாஸ்திர ஞானங்களையும் ஏனைய நாட்டின் சம்பவங்களையும் அங்கத்திலேந்தி வெளியுலாவ மகுடத்தில் காணும் நாமம்புனைந்த தமிழ் பத்திரிகை அச்சிடப்பட்டு வருகிறது. இப்பத்திரிகையை யாவரும் ஆதரிப்பார்களாக.

சந்தா விபரம்.

உள்ளூர் சந்தா.		வெளியூர் சந்தா.	
வருஷம் 1-க்கு	$10 00	வருஷம் 1-க்கு	$15 00
6-மாதத்திற்கு	5 50	6-மாதத்திற்கு	8 00
3-மாதத்திற்கு	3 00	3-மாதத்திற்கு	4 50
1-மாதத்திற்கு	1 00	1-மாதத்திற்கு	1 50
தனிப்பிரதி 15-காசு		தனிப்பிரதி 18-காசு.	

கு. அ. அசன் முகைய்யதீன்,
மானேஜர், சர்வஜன மித்திரன்,
97. பினங் ஸ்திரீட், பினங்கு.

ஹிதாயத்துல் இஸ்லாம்.

இப்பத்திரிகை ஜாதிவித்தியாச மில்லாமல் எல்லாமார்க்கங்களையும் கல்வியையும் வியாபாரத்தையும் இராஜாங்க சட்டத்தையும் பொது ஜனகாரியங்களையும்தைரியமாய்பயமில்லாமல்எடுத்துப் பேசும், ஹிந்து முஸ்லிம் ஒற்றுமையை எடுத்துக் காண்பிக்கும். வாரம் 10,000 கப்பிகள் வெளியாகின்றன. வருஷ சந்தா ரூ 5-0-0 சிங்கப்பூர் பினங்கு ரூ 7-7-0. முன்பணம் அனுப்ப வேண்டும். வி. பி. பி. இல்லை.

விலாசம்:—(நைசாம்)
டாக்டர் H. H. மவ்லானா சையத்ஹுஸைனி,
69. டீன்ஸ் ரோடு கொழும்பு

கனவான்களின்
உயர்ந்த லீவர் வாட்சுகள்,

இந்த கெடியாரத்தின் பின்புறமுள்ளமூடியின் பேரில் வெகு அழகாய் சித்திரவேலை செய்யப்பட்டிருக்கிறது. நல்ல உறுதியுள்ள சாமான்களால்நீடித்து உழைக்கக் கூடியனவாய் தயாரிக்கப்பட்டவை. ரூ. 4-8-0 ரேடியம் 8 மூலை ரிஸ்ட்லெட் வாட்சு விலை ரூபா 7-0-0, ரேடியம் ரவுண்டு வாட்சு விலை ரூபா 6-0-0, ரேடியம் இல்லாத சாதா வாட்சு விலை ரூபா 5-0-0.

தைரியலக்ஷ்மி & கம்பெனி,
தபாற்பெட்டி 265, மதராஸ்.

பிளுபிளாக் இங்க் மாத்திரைகள்.

விலை சரஸம், எழுதினல் அழியாதது. பிரகாசமுள்ளது. இங்கியில் திப்பி கிடையாது. ஒரு இங்க் பாட்டில் நிரம்ப இங்க் கரைக்க ஒரு மாத்திரை போதும். (தபால் கூலி பிரத்தியேகம்.)

எ. ச். பிரதர்ஸ் & கோ.
61, ராஜாநாபா கிருஷ்ண தெரு,
கல்கத்தா.

நாகரிகம் பெற்ற இந்தியர்களுடைய கோரிக்கைகளேயும் அபிப்பிராயங்களேயும் நாம் (பிரிட்டிஷார்) அசட்டைசெய்யவும் அருவருக்கவும்கூடாது:-வில்லியம் இவார்ட் கிளாட்ஸ்டன்.

"தாங்கள்"
நோயற்ற வாழ்வுடன்

சுக ஜீவியாய் ஜீவித்திருக்கவும், ஆயுள் விருத்தியையும் சந்தான சந்ததிகளேயும் பெருக உண்டாகச் செய்யக்கூடிய

புத்தகம்,

தங்களுக்கு வேண்டுமானல் அரை அணஸ்டாம்பு அனுப்பினல் இனமாகவே அனுப்பிவைப்போம்.

ஹக்கீம் S. P. M.
அப்துல்கனிராவுத்தர்,
வலங்கைமான்,
தஞ்சை ஜில்லா

நோட்டீஸ்.

தஞ்சாவூர் கோட்டை தெற்கலங்கம் தெருவில் காரைக்குடியிலிருந்து வந்து லேவாதேவிகடை வைத்திருக்கும், மெ. சு. பழனியப்ப செட்டியாகிய யென்னல் ஷி கடைக்கு பவர் யேஜண்டாக ஷி தஞ்சாவூர் கோட்டை வெளி கீழவாசல் பெரிய அரிசிகாரத் தெருவிலிருக்கும் அளகப்பிள்ளை குமாரர் சாம்பசிவம்பிள்ளைக்கு 10-12-19 தில் கொடுக்கப்பட்டிருந்த ஜெனரல் யேஜண்டு பவர் ஆப் அட்டாணியை 12-8-20 தில், கியான்சல் செய்துவிட்டேன். ஷி 12-8-20 முதல் ஷி சாம்பசிவம்பிள்ளை யென்னுடைய பவர்ஏஜண்டும் அல்ல. மேற்படி கடை சம்பந்தமான ஏஜெண்டுமல்ல. இது சங்கதியை இதன்மூலமாகசகலருக்கும் தெரிவிக்கலானேன். இதோடு ஷி சாம்பசிவம் பிள்ளைக்கு ஷி கடை நடவடிக்கை விஷயமாய் யென்னுடைய தம்பி மெ. சு. சுப்பிரமணியஞ்செட்டியால்10-12-19ல்கொடுக்கப்பட்டிருந்த ஜெனரல் யேஜண்டு பவர் ஆப் அடடாணியையும் 20-8-20 ல் கியான்சல் பண்ணி நிறுத்திவிட்டபடியால் ஷி 20-8-20 முதல் ஷி சுப்பிரமணியஞ் செட்டிக்கும்மேற்படி கடைக்கும் ஷி சாம்பசிவம் பிள்ளை பவர் யேஜண்டல்ல வென்பதையும் இதன் முலம் சகலருக்கும் தெரிவிக்கலானேன்.

தஞ்சாவூர் 22—8—20. } மே. சு. பழணியப்ப செட்டி,

பல கண்காக்ஷிகளில் மெடல்கள்பெற்ற அபூர்வ ஔஷதங்கள்.

பி. சுப்பராய் ஆயுர்வேத ஔஷதசாலை.

ஸ்ரீ வேங்கடேசபெருமாள் கோவில் சன்னதி, தஞ்சாவூர்.

1. தாதுபுஷ்டி மருந்து:—இதன் குணத்தை எழுதிமுடியாது. அனுபோகத்தால் தெரிந்துகொள்ளலாம். தாதுநஷ்டம், பலஹீனம், பசியின்மை, கண், கால் எரிவு, தேகவாக்ஷி, கை கால் இடுப்பு முதலிய அவயவங்களில் சோர்வு, வலி, சோம்பல், மேகச்சூடு, பாண்டு, சோகை, மேகவெள்ளை, வெட்டை, நீரழிவு, மதுமேகம், சதையடைப்பு, இன்னும் பற்பல மூத்திர ரோகங்களேயும்போகும். சரீரபுஷ்டி, புருஷத்தன்மை, ஜிரணசக்தி, அபிரிமிதமான தாதுவிருத்தியையும் யுண்டாகும். நீத்திருக்கும் இந்திரியத்தைக் கெட்டிப்படுத்தி போகசக்தியை அதிகரிக்கும். டப்பா 1-க்கு விலை ரூபா 2, வி. பி. சிலவு அணா 5 பிரத்தியேகம்.

2. அக்கினி மாந்தத்திற்கு மருந்து:—பசியின்மை, புளித்த ஏப்பம், நெஞ்செரிச்சல், மலச்சிக்கல், வயிற்றுவலி, வாய் நாற்றம், அஜீரணம், வயிற்றுப்பிசம், நித்திரை யில்லாமை, பித்த உபத்திரவங்களே சொஸ்தப்படுத்தும். பசி தீபனமும், தேக ஆரோக்கியமும் தரும். டப்பா 1-க்கு அணா 8, வி. பி. சிலவு 1 அல்லது 2 டப்பாக்கள் வரையில அணா 5 பிரத்தியேகம்.

3. பிரமேக நிவாரணி:—எந்த காரணத்தினல் உண்டாயிருக்கும் மேகவெள்ளை, வெட்டை, நீர்குற்றல், நீர் தாரை எரிவு, சீழ் ரத்தம் வடிதல், முதலிய வியாதிகளேயும் ஆண், பெண் இருதாரத்தார்களுக்கும் சொஸ்தப்படுத்தும். சீசா 1-க்கு விலை ரூபா 1, வி, பி. சிலவு ஒன்று முதல் 6 சீசாக்கள் வரையில் அனுப்ப அணா 5 பிரத்தியேகம்.

நமது நேயர்களுக்கு.

நமது நேயர்கள் தங்களது சந்தாதொகைகளேக் காலதாமதமன்னியில் அனுப்பித் தரும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். (ப-ர்.)

ஸமரஸபோதினி, தஞ்சாவூர்.

இனம்! இனம்!! இனம்!!!

ஸமரஸபோதினி சந்தாதாரர்களுக்கு மாத்திரமே

(செப்டம்பர் மாதம் **30**-ந் தேதிக்குள் ஆர்டர் செய்வோருக்கு.)



இங்கிலாந்தில் பெயரெடுத்த "வாட்டர்மென்" பவுன்டன்பேனவையொத்த ஒருபுதுமாதிரி "வேல்லஸ்லி" என்ற பெயருடன் ஒரு பேன இப்பொழுதுதான் எமக்குவந்தது. இதன் விலையையும், அமைப்பையும் கவனித்தால் இதற்கு கொடுக்கும் விலை மிகவும் சொற்பமென்றே சொல்லலாம். இது 14 காரட்டு பொன்நிப்புடனும், மிக அழகாயும் ஷி பேனவின் மூடிகளில் ஸ்குரு வைத்திருப்பதாயும், ஷி பேனவை பாக்கெட்டில் எந்த மாதிரி போட்டாலும் இங்கிகொட்டாவண்ணம் செய்யப்பட்டிருக்கின்றது. இது இங்கிலாந்தில் எமக்கென்றே செய்யப்பட்டவை. எமக்கு இந்த "வெல்லஸ்லி" பேனக்கள்பிரதிதினமும் நூற்றுக்கணக்காய்செலவாகி வருகிறபடியால் தேவையுள்ளோர்சீக்கிரம்நமக்கு ஆர்டர்செய்துபெற்றுக் கொள்ளவும்.

"வெல்லஸ்லி" பேனக்களில் பல மாதிரிகள்.

வெல்லஸ்லி சேப்டி நெ. 11 இது வாட்டர்மென்ஸ் சேப்டி பவுண்டன் பேனவை போலவேயிருக்கும் விலை ... ... ரூ. 4 8.
ஷி „ 12 ... ... „ 5 0.
ஷி „ 206 சேப்டி செல்ப் பில்லர் இந்த பேனவிற்கு இங்கிபோட வேண்டுமென்றல் ஷி பேனவை இங்கிபுட்டியினுள் காட்டி பேனவின்மேலுள்ள ஸ்பிரிங்கை தூக்கினல் பேனவானது இங்கியை தானகவே உட்கொள்ளும். „ 5 8.

எமது விலாசம்:— "ஸமரஸபோதினி" சந்தாதாருக்கு தபாற்கூலி இனம்.

ஸ்டெஷனரி சப்ளை கம்பெனி, மதராஸ்,

"Be just and fear not,
Let all the ends thou aimest at,
Be thy Country's, thy God's & Truth's"

ரௌத்ரி ௵ ஆவணி ௴ ௩௧௳ புதன்கிழமை.
15th SEPTEMBER 1920.

காங்கரஸ் நிலை.

இந்திய தேச சரித்திரத்தில் இதுகாறும் ஏற்படாத ஒரு நெருக்கடியான நிலை ஏற்பட்டிருக்கிறது. இது ஸாதாரண நெருக்கடியல்ல. இந்த நெருக்கடியால் இந்தியர்களின் அரசியல் வாழ்க்கையில் ஒருவரும் எதிர்பாராதபடி மாறுதலுண்டாகும்போலிருக்கிறதென்று சொல்லலாம். இந்த மாறுதலினால் தேசத்தில் என்ன விளையுமோவென்று இந்திய ஸ்திரீ புருஷர்கள் எதிர்நோக்கியிருக்கிறார்கள். அவ்வளவு பெரிய மாறுதலுக்குக் காரணமென்ன? வென்று நம் நேயர்கள் கேட்கலாம். காரணம் விசேஷ காங்கரஸ் ஒப்புக்கொண்டிருக்கிற மகாத்மா காந்தியின் ஒத்துழையாமைத் தீர்மானமாகும். பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் கிலாபத் விஷயத்திலும் பஞ்சாப் விஷயத்திலும் இழைத்திருக்கிற தவறுகளை நிவர்த்திசெய்து, இனி இவைபோன்ற தவறுகள் செய்யாவண்ணம் இந்தியர்களுக்கு முழு சுயராஜ்யம் வழங்கவேண்டுமென்பதை முன்னிட்டே ஒத்துழையாமைத் தீர்மானம் கொண்டுவரப்பட்டுக் காங்கரஸில் நிறைவேற்றப்பட்டிருக்கிறதென்பதை யாவரும் அறிவார்கள். மகாத்மாகாந்தியின் ஒத்துழையாமைத் தீர்மான விவரமும் அவர் அதைப் பிரரேபித்தபொழுது அது அவசியமென்றுபேசிய பேச்சின் சாராம்சத்தையும், சகோதரர்கள் அறியவேண்டி, நாம் மற்றோரிடத்தில் வெளியிட்டிருக்கிறோம். காந்தியடிகளின் தீர்மானத்திற்கு ஸ்ரீயுத விபினசந்திரபாலர் கொண்டுவந்த திருத்தப்பிரரேபணையின் விவரத்தையும் பிரசுரித்திருக்கிறோம்.

இப்பொழுது நம் தேசமிருக்கும் நிலையில் நம் தலைவர்களில் ஒத்துழையாமைத் தீர்மானம் அவசியமென்று சிலரும், கொஞ்சம் அவசியமென்று வேறு சிலரும், அவசியமேயில்லையென்றுமற்றும்சிலரும் அபிப்பிராயப்படுகிறார்கள். இன்னும் சிலர் இத்தீர்மானப்படி ஜனங்கள் அனுஷ்டிக்கமுடியாதென்றும், தேசத்தில் குழப்பமும் கலகமும்உண்டாகுமென்றும் கூறுகிறார்கள். பின்னும்சிலர் ஒத்துழையாமைக்கு ஜனங்கள் தயாராயில்லையென்றுசொல்லுகிறார்கள். இவ்வாறுஇவர்கள் சொல்லுவது ஸகஜமும் நியாயமுமாகும். இவ்விஷயத்தைப்பற்றி நம் தலைவர்கள் கடந்த மாதம் முதல் யோசித்து வந்திருக்கிறார்களென்று சொல்வதுமிகையாகாது. இவர்களுடைய யோசனையின் பயனாக ஒத்துழையாமை இயக்கம் நியாயமானதும் சட்டவரம்பிற்குட்பட்டதுமானதென்று கனம் பண்டிட் மதன்மோகன் மாளவ்வியா கனம் காமினி குமாரசந்திரர் முதலிய இராஜப் பிரதிநிதி சட்டசபை மெம்பர்கள் பகிரங்கம் செய்திருக்கிறார்கள் லாலா லஜபதிராய் உள்பட மற்றத்தலைவர்களும் நியாயவாதிகளும் அவ்வப்போது ஒத்துழையாமை இயக்கம் நியாயமானதென்று அபிப்பிராயம் கொடுத்திருக்கிறார்கள். இவ்வியக்கம் குறிப்பிட்ட அநீதிகளை நிவர்த்திசெய்து முழு சுயராஜ்யம் பெறுவதற்காக ஏற்பட்டதேயன்றிப் பிரிட்டிஷ் ராஜாங்கத்தை அடியோடு கவிழ்க்க ஏற்படவில்லையென்பதை மகாத்மா காந்தியடிகள் அறிவித்திருக்கிறார்கள். மேலும்இதுதாற்காலிகமாக ஏற்பட்டதாகும். ஆகவே முழுசுயராஜ்யம் ஏற்பட்ட பிறகு ஒத்துழையாமை இயக்கம் அடிபட்டுப்போய்விடுமென்பதை உத்தேசித்தும், இந்தியர்களுடைய லட்சியம் நிறைவேற்றப்படவேண்டுமென்பதைக் கருதியும் இந்தியாவின் பிரதிநிதிகளடங்கிய விசேஷ காங்கரஸ் மகாத்மா காந்தியின் ஒத்துழையாமைத் தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறது.

சில யோசனைகள்

இப்போழுது நாம் கவனிக்க வேண்டியதென்ன? விசேஷகாங்கரஸ் பலநாட்கள் யோசித்து ஒப்புக்கொண்டிருக்கும் தீர்மானத்தை இந்தியர்கள் கொள்ளுவதா? தள்ளுவதா? என்ற விஷயம் எல்லோரையும் கலக்கிக்கொண்டிருக்கிறது. காங்கரஸ் அக்கிராசனர் கூறியதுபோல் ஒத்துழையாமைத்தீர்மானப்படி மாணவர்களைக் கவர்ன்மெண்ட் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பாமலிருக்க வேண்டுமென்பதும்வக்கீல்கள்கோர்ட்டுகளுக்குப் போகக்கூடாதென்பதும் சிரமமான காரியமென்றே நாம் நினைக்கிறோம். நம் கையில் ஆட்சி முறையின் முழுநிர்வாக அதிகாரமில்லாமலிருக்கும்வரையில், மாணவர்களைப் பள்ளிக்கூடங்களுக்கும் கலாசாலைகளுக்கும் அனுப்பாமலிருத்தல் தவறாகும். இதை உத்தேசித்துப் பல தலைவர்களின்வேண்டுகோளுக்கிணங்கிமகாத்மாகாந்தியடிகள் தம்தீர்மானத்தில் மேற்கண்ட அம்சங்கள் சம்பந்தப்பட்டமட்டில் "படிப்படியாக"என்றபதத்தைச் சேர்த்தாரெனத் தெரிகிறது. பிறகு அந்நியசாமான்களைப் பகிஷ்காரம் செய்தல் என்ற அம்சமும் தீர்மானத்தில் சேர்க்கப் படாமலிருந்திருக்கலாம். பிரதிதினம்வாழ்க்கை நடத்துவதற்குவேண்டிய பொருள்களை அந்நியநாடுகளினின்று அநேகமாக ஜனங்கள் எதிர்பார்த்திருக்கும்போது, அவைகளை இன்று முதல் பகிஷ்காரம் செய்து விட வேண்டுமென்று ஸ்ரீமான் ஸி. விஜயராகவாச்சாரியார் வற்புறுத்தியது அவசரப்பட்டுச் செய்த காரியமென்றே நாம் கூறுகிறோம். இந்த அம்சம் சுதேசிய விரதத்தில் அடங்கியிருக்கிறது. சுதேசிய விரதம் ஜனங்களாலும் முக்கியமாகத்தலைவர்களாலும் அனுஷ்டிக்கப்பட்டால் பிரிட்டிஷார் கட்டாயம் இந்தியர்கள் கோருவதைக்கொடுப்பார். மேலும் இதுதவிர கால்வயிறு அரைவயிறு பட்டினிகிடந்துமடியும்ஜனங்கள் வயிறாரஉண்டுஜீவித்திருக்கஇடமுண்டாகும். கடைசியாகச் சட்டசபையைப் பகிஷ்காரம் செய்யவேண்டுமென்பதாகும். இந்த அம்சம்காங்கரஸில்பலமாகவாதிக்கப்பட்டது. இந்த அம்சத்தை நம்தலைவர்கள் அநேகமாகஎல்லோரும் ஒரு முகமாய் நின்று ஆட்சேபித்தார்கள். இவர்கள் ஆட்சேபித்ததின் காரணங்களை நாம் பரிசீலனை செய்தோம். தேசமுற்போக்குக்கான காரியங்களைச் சட்டசபைக்குச்சென்றுதான் செய்ய முடியமென்று இவர்கள் கூறியது தவறாகும். சட்டசபைக்குப் போகாமல் வெளியிலிருந்துகொண்டேசட்ட சபையிலிருந்து கொண்டுசெய்யப்படும் நன்மைகளைக் காட்டிலும் பன்மடங்கு செய்யலாமென்பது எமது துணிபு. பல வருஷங்கள் தேசத்தொண்டு செய்து அனுபவம் பெற்றவர்களின் துணிபும் இவ்வாறாகவேயிருக்கிறது. ஆகலால் சட்ட சபைக்குப்போகாமலிருந்தால் குடிமுழுகிப்போய்விடுமென்று நம்தலைவர்கள் அஞ்சுவது அநாவசியமாகும். காங்கரஸ் தீர்மானப்படி உடனே செய்ய வேண்டிய விஷயங்கள் இரண்டு. அதாவது பட்டங்களை வேண்டாமென்று விட்டு விடுவதும்; சட்டசபைகளைப் பகிஷ்காரம் செய்வதுமாகும். இவ்விரண்டு விஷயங்களும், சிலர் கூறுவதுபோல், சாதாரண ஜனங்களைப் பாதிக்கக்கூடியவையல்ல; பட்டதாரிகளையும் விஷயம் அறிந்தவர்களையும் தகுந்த அந்தஸ்துள்ளவர்களையும் சேர்ந்தவையாகும். இவ்விரண்டு அம்சங்களையும் காங்கரஸ் தீர்மானப்படி படித்தவர்கள் எவ்வளவு தூரம் நிறைவேற்றுகிறார்களென்று பார்ப்போம்.

காங்கரஸ் வாதிகளின் கடமை.

விசேஷ காங்கரஸ் ஒத்துழையாமைத் தீர்மானத்தை அங்கீகரித்திருக்கிறபடியால் காங்கரஸ் வாதிகள் அதன்படி நடக்கக் கடமைப்பட்டவர்களாயிருக்கிறார்கள். அதற்கு விரோத மாகவோ அல்லது அதைச் சட்டை செய்யாமலோ இருப்பது காங்கரஸ் சபைக்குத் தீங்குதேடுவதாகும். விசேஷ காங்கரஸ் தீர்மானத்தின் படித்தான் நடக்க கடமைப் பட்டிருக்கிறோமென்று படாடோபம் செய்து சொல்லிக்கொண்டிருந்தவர்கள்
திடீரென்று இப்பொழுது மாறினதற்கு
காரணம் புலப்படவில்லை. தமக்குச்சாதக
யிருந்தால் காங்கரஸ் தீர்மானத்தின்
நடப்பதென்றும் தமக்குப் பாதகமா
தால் நடக்கக் கூடாதென்றும்
சரியான பேச்சல்ல. அப்படி
ருவரும் கூறுவதாயிருந்தால்
ஸின் கட்டுப்பாடும் ஒற்றுமையு
போய் விடும்.

இச்சந்தர்ப்பத்தில் ஸ்ரீமான் வி. பி. மாதவராயரவர்களும் ஸ்ரீமான் சேலம் ஸி. விஜயராகவாச்சாரியாரும் சட்டசபைகளுக்கு அபேட்சகர்களாய் நிற்க மாட்டோமென்று கூறிவிட்டார்கள். இவர்களைப்பின்பற்றிக் காங்கரஸ்பெருமையையும் அதன் அதிகாரத்தையும் குறைக்கக் கூடாதென்று ஸ்ரீமான்கள் திரிச்சி கே. வி. ஜம்புநாதய்யர், சேலம் டி. ஆதிநாராயண செட்டியார், சாத்தூர் சுப்பிரமணிய நாயனார் முதலியவர்கள் சட்டசபைக்கு அபேட்சகராக நிற்பதினின்றும் விலகிக்கொண்டு விட்டதாக அறிவித்திருக்கிறார்கள்; காரணமென்ன? பாரத மகாசபையின் தீர்மானத்திற்கு விரோதமாக நடப்பது துரோகச் செயலாகுமென்பதே. விஷயம் விவாதத்திலிருக்கும்பொழுது கட்சிப்பிரதிகட்சி எடுத்துச் சொல்லலாம். ஆனால் விவாதம் முடிந்து ஒரு விதமான தீர்மானத்திற்குவந்தபிறகு ஒருவருக்கு அத்தீர்மானம் பிடிக்கவில்லையென்றாலும் அவர் பொதுஜன அபிப்பிராயத்திற்குட்படவேண்டியதுதான் நீதியாகும். இம்மாதிரி அனுஷ்டிப்பதுதான் சரியான வழியென்று நம் தலைவர்கள் சென்ற இரண்டரை வருஷம் முழுவதும் பறையடித்து வந்தார்கள். இப்பொழுது அந்தக் கொள்கை எங்கே போய் விட்டது?

கடைசியாக, விசேஷ காங்கரஸ் தீர்மானத்தைப்பற்றிப் பலர் பலவிதமாக அபிப்பிராயப்பட்டாலும், அவர்கள் காங்கரஸ் அதிகாரத்தையும் அதின் செல்வாக்கையும் குறைக்கும்படியான காரியங்களைச்செய்வது தருமமாகாது. காங்கரஸ் தீர்மானப்படியே நடப்பதுதான் ஒவ்வொர் இந்தியரின் கடமையாகும்.

இடைநிலை விளக்கு.

வெறுக்கத் தகுந்த செயல்கள்.

நேற்று முன் தினம் வெளியான பத்திரிகைகளில் சென்னை மாகாண காங்கரஸ் கமிட்டியினின்று அதன் அக்கிராசனரான ஸ்ரீமான் எஸ். கஸ்தூரிரங்க ஐயங்காரும் நிர்வாக மெம்பர்களில் ஸ்ரீமான்கள் எ. ரங்கசாமி ஐயங்காரும் காரியதரிசிகளில் ஸ்ரீமான் எஸ் சத்யமூர்த்தியும் தங்கள் தங்கள் பதவியை ராஜிநாமா செய்து விட்டார்களென்று அறிகிறோம். இவர்களுடைய ராஜிநாமாக்களைப்பற்றி நாம் இப்பொழுதொன்றுஞ் சொல்லப் போவதில்லை. ஆனால் இவர்களுடைய செயலினால் ஜனங்கள் மனதில் காங்கரஸ் மீது எவ்விதமான எண்ணம் உதிக்குமென்பதைப் பற்றியே நாம் ...வலைப் படுகிறோம். டெல்லிக் காங்கரஸ் ...ல் காங்கரஸ் தீர்மானத்தை லட்சிய... வைத்துக்கொண்டு அதன்படி நடப்பது ...இந்தியர்களின் கடமையென்று ...த்து வந்த ஸ்ரீமான் எஸ் கஸ்தூரி ...ங்கார் கோஷ்டியினர் இப்பொழு...காங்கிரசுக்கு விரோதமாகப்போ... ? மெஜாரிடி கட்சியினர் செய்யும் தீர்மானம் எப்பொழுதும் சரியாக விராதென்று ஹிந்துப் பத்திரிகை உபதேசம் செய்கிறது! இந்த உபதேசத்தை ஹிந்துப் பத்திரிகையாரிடம் கடன் வாங்கினதோ?

வேண்டுகோள்.

இம்மாதம் 1ந் தேதி முதல் உள் நாட்டுக்கும் இலங்கைக்கும் வி. பி. மூலமாய் அனுப்பப் படுகிற பார்சல்களும் பாக்கெட்டுகளும் கடிதங்களும் ரிஜிஸ்டர் செய்து அனுப்பப்பட வேண்டுமென்று ஒரு போஸ்டாபீஸ் உத்தரவு பிறந்து அமுலிலிருந்து வருவதை நேயர்கள் அறிவார்கள்.

நாம் சந்தா நேயர்களுக்கு வி. பி. அனுப்பினால் இனி இந்த உத்தரவின்படி வி. பி. சார்ஜைத் தவிர ரிஜிஸ்டர் சார்ஜ் இரண்டணாவும் அவர்கள் கொடுக்க வேண்டியவர்களாயிருக்கிறார்கள். இதை உத்தேசித்து நம் நண்பர்கள் மணியார்டர் மூலமாகத் தாங்களாகவே தங்கள் சந்தாத்தொகைகளை அனுப்பிக் கொடுக்குமாறு நாம் வேண்டிக் கொள்கிறோம்.

நிதானம் வேண்டும்.

கவர்ன்மெண்டாருக்கு இச்சமயத்தில் ஒரு யோசனை சொல்ல விரும்புகிறோம். விசேஷ காங்கரஸ் ஒத்துழையாமைத் தீர்மானத்தை நிறைவேற்றியிருப்பதை முன்னிட்டு அநாவசியமாகப் பீதியடைந்து மாண்டு ஆங்காங்கு அடக்குமுறைகளை, ஆங்கிலோ இந்தியப் பத்திரிகைகளின் தூண்டுதல்களுக்கிணங்கி, பிரயோசிக்க நினைப்பதான து முற்றிலும் தவறான முறையாகுமென்று நாம் வற்புறுத்துகிறோம். கவர்ன்மெண்டார் இதுகாறும் நடு நிலையிலிருந்தாற்போல் எப்பொழுதுமிருப்பது விவேகமாகும். ஜனங்கள் மனக்கொதிப்படைந்திருக்கும்போது அவர்கள் விஷயத்தில் சென்ற வருஷம் டெல்லியிலும் பஞ்சாபிலும் போலீசார் தலையிட்டது போல் தலையிடுவது மிகவும் அபாயமாகும். சென்னை மாகாணத்தைப் பொறுத்தமட்டில் லார்ட் வில்லிங்டன் ஜனங்களின் மனப்பான்மையை அறிந்து நிதானபுத்தியுடன் நடப்பரென்று நம்புகிறோம்.

மிஸ்டர் பி சக்கரவர்த்தியின் உபந்நியாசம்

விசேஷ காங்கரஸ் வரவேற்புக் கூட்டத்தலைவர் மிஸ்டர் பி. சக்கரவர்த்தி அக்கிராசனரையும் பிரதிநிதிகளையும் வரவேற்றுப் பேசியபோது லோகமான்ய பாலகங்காதர திலகர், தற்காலநிலைக்குரிய காரணங்கள், பஞ்சாப் விஷயமாகக் காங்கரஸ் சப்கமிட்டியின் ரிபோர்ட்டையும் ஹண்டர்கமிட்டி ரிபோர்ட்டையும் பரிசீலனை செய்தல், சீர்திருத்த விஷயமாக இந்தியா கவர்ன்மெண்டாரின் ரிபோர்ட்டு முதலியவைகளைப்பற்றித் தேசிய நோக்கத்தில் ஆராய்ச்சி செய்து அபிப்பிராயம் கொடுத்துவிட்டு ஒத்துழையாமையைப் பற்றியும் கிலாபத் விஷயத்தைப் பற்றியும் பேசினார். கிலாபத் விஷயத்தில் முஸ்லிம்கள் செல்லும் வழியை ஹிந்துக்கள் ஆட்சேபனை சொல்லாமல் பின்பற்றவேண்டுமென்றும், ஹிந்து முஸ்லிம் ஒற்றுமையை, சத்துருக்கள் என்ன சொன்னாலும், அபிவிருத்தி செய்யவேண்டுமென்றும் இந்து முஸ்லிம் ஒற்றுமை கற்பாறையுள்ள அஸ்திவாரத்தின் மீது அமைக்கப்பட்டிருக்கிறதென்றும், நேசக் கட்சியார்கள் சர்வதேசச் சங்கத்தாரிடம் அதிகாரம் பெற்று பல மற்ற ராஜ்யங்களை ஆளுவதாகச் சொல்லுவது குழந்தைகளை ஏமாற்றக்கூடியதாயிருக்கிறதேயன்றி வேறொன்றுமில்லையென்றும். சுய நிர்ணயம், சுதந்தரம் என்று பேசிவிட்டுத் துருக்கி நாடுகளிலுள்ள ஸிரியாவைப்பிரான்ஸும் பாலஸ்தீனத்தை இங்கிலாந்தும் ஆர்மீனியாவை அமெரிக்காவும் பகிர்ந்துகொள்ள என்ன துணிச்சல் படைத்திருக்கின்றனரென்றும், இஸ்லாம் உலகம் இந்தக்கொடுமையைப் பார்த்துவிட்டு ஒரு நாளும் சும்மாவிருக்கமாட்டாதென்றும், இச்சமயத்தில் ஹிந்துக்கள் முஸ்லிம்களின் வழிகளைப் பின்பற்றிக் கைகோத்து முன் செல்லவேண்டுமென்றும் சொன்னார். பிறகு ஒத்துழையாமையைப்பற்றிக் குறிப்பிடும்போது, மிஸ்டர் சக்கரவர்த்தி ஒத்துழையாமைக் கொள்கை தமக்கு ஏற்கிறதென்றும், ஆனால், அதன் அனுஷ்டான விவரங்களில் சில தமக்குப் பிடிக்கவில்லையென்றும் எனினும் காங்கரஸ் யோசித்து ஒரு நிரந்தரமான எல்லோரும் அனுஷ்டிக்கக்கூடிய வழிகளைக் கண்டுபிடிக்கவேண்டுமென்றும் கூறினார்.

"நம்பிக்கை இல்லை"

கவர்ன்மெண்ட் அரச தந்திரிகள்வாய்இனிப் பாகப்பேசுபவைகளில் தமக்கு நம்பிக்கையில்லையென்றும், பிரிட்டிஷார் வியாபார நிமித்தம் இந்தியாவுக்கு வந்து கொஞ்சம் கொஞ்சமாகத் தேசங்களைப் பிடித்துக்கொண்டார்களென்றும், பிறகு பெரிய ராஜ்யமாகச் செய்துகொண்டு தேசத்தைத் தங்களுடைய போக்குப் படிக்கே நாளது வரையில் ஆட்சி செய்துவருகிறார்களென்றும், நாகரிகம் வாய்ந்த பிரிட்டிஷார் நியாயம் தர்மம் கருணை முதலியவைகளை அலட்சியம் செய்துவரும்போது இந்தியர்கள்செய்யவேண்டிய காரியங்களை ஆலோசிக்கவேண்டுமென்றும் குறிப்பிட்டார். கடைசியாக இந்தியா ஒருபெரிய ராஜீயப்புரட்சியிலிருக்கும்போது, கவர்ன்மெண்டார் எகிப்து தேசத்திற்குக் கொடுத்திருப்பதுபோல் ஏன் சுயாதின் ஆட்சி இந்தியாவுக்குக் கொடுக்கக்கூடாதென்று வினவி, இது காறுமிருந்தது இனிபோ இராதென்று எச்சரிக்கை செய்தார்.

வித்தியா அபிவிர்த்தினி சபா.

இம்மாதம் 11-ந் தேதி சனிக்கிழமை தஞ்சை வித்யாபிவிர்த்தினி சபா ஆதரவில் அன்னபூரணி பெண்கள் பாடசாலையில் ஸ்திரிகளின் கூட்டமொன்று கூடியது. அன்னபூரணி பெண்கள் பாடசாலை அன்னபூரணி வாசகசாலை இவைகளின் முன்னேற்றத்திற்கு எல்லோரும் உதவி செய்யவேண்டுமென்று ஸ்ரீமதி பி. காமாட்சியம்மாள் (சப்ஜட்ஜ் மிஸ்டர் பி. சுப்புராவின் மனைவி) ஓர் உபந்நியாசம் செய்தார். பிறகு தஞ்சை மகா ஜனங்கள் அன்னபூரணி வாசகசாலைக்கு உதவி செய்யவேண்டுமென்றும் இந்தக் கூட்டத்தின் தீர்மானத்தை ஜில்லா போர்டாருக்கு அனுப்புவதாகவும் தீர்மானிக்கப்பட்டன. கடைசியில் இச்சபைக்கு ஸ்ரீமதி விஜயவல்லபாய் பிரிஸிடெண்டாகவும், ஸ்ரீமதி. பி. காமாட்சியம்மாள் வைஸ்பிரிஸிடெண்டாகவும், ஸ்ரீமதி சோனுபாயம்மாளும் ஸ்ரீமதி அன்னபூரணி அம்மாளும் காரியதரிசிகளாகவும், ஸ்ரீமதி உமா பாயம்மாள் பொக்கிஷதாராகவும் ஸ்ரீமதிகள் யோகாபாய் சரஸ்வதி பாய் கமிட்டி மெம்பர்களாகவும் தெரிந்தெடுக்கப்பட்டார்கள்.

ஹிந்து-முஸல் மான்-கி-ஜேய்

நமது விசேஷ நிருபர் எழுதுகிறார்.

கல்கத்தா, 10-9-20.

இப்பொழுது "ஹிந்து-முஸல்மான்-கி-ஜேய்" என்ற கோஷம் எங்கும் பரவி விட்டது. முன்னர் வந்தேமாதரம் கோஷம் வங்காள மாகாணத்தில் எவ்வாறு அதி தீவிரமாகப் பரவி ஒவ்வொரு வீட்டிலுள்ள ஸ்திரீ புருஷர்களுடைய நாவில் தாண்டவமாடியதோ அதே மாதிரியாகத் தற்காலம் "ஹிந்து-முஸல்மான்-கி-ஜேய்" என்ற கோஷம் ஒவ்வொரு வீட்டாரின் நாவில் தாண்டவமாடுகிறது. சொல்லப்போனால் ஹிந்து-முஸல்மான்-கி-ஜேய் என்ற பதத்தைச் சிறுவர்களும் சிறுமிகளும் பெரிய ஸ்திரீகளும் சங்கோசமில்லாமல் உபயோகிக்கிறார்களென்று நான் திட்டமாய்க் கூறுவேன். ஓர் இந்து கனவான் தம் முஸ்லிம் நண்பரைக் கண்டவுடன் அவருக்கு இந்து-முஸல்மான்-கி-ஜேய் என்று வந்தனம் செய்து விட்டு அவரை வரவேற்பது இம்மாகாணத்தில் ஸகஜமாகி விட்டது. இந்தச் சம்பவத்தை நான் காங்கிரஸில் பலதடவை கண்டேன்.

விசேஷ காங்கரஸ் இங்குக் கூடியதன் பயனாக எல்லா இந்தியா கிலாபத் கான்பரன்சும் எல்லா இந்திய முஸ்லீம் லீக் மகா நாடும் கூடின. இந்துக்களைக் காட்டிலும் முஸ்லிம்கள் இந்தியாவின் பல பாகங்களிலிருந்து விசேஷ காங்கிரசுக்கு விஜயம் செய்திருந்தார்கள். விசேஷ காங்கிரசுக்கு விஜயம் செய்தவர்களில் இந்துப் பிரமுகர்களெல்லோரும் எல்லா இந்திய முஸ்லீம் மகா நாட்டுக்கும் கிலாபத் கான்பரன்சுக்கும் விஜயம் செய்து அம்மகா நாடுகளைக் கௌரவித்தார்கள். "ஹிந்து-முஸல்மான்-கி-ஜேய்" என்று அவர்களும் கோஷம் செய்தார்கள். இவ்வுச்சரிப்பு இப்போது இந்தியர்களுக்கு வேத மந்திரமாய் விட்டது. இந்த மந்திரத்தை இந்துக்களும் முஸ்லிம்களும் உச்சாடனம் செய்ய வேண்டுமென்று நம் தலைவர்கள் திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார்கள்.

பெரியோர் வாக்கு

பெரியோர் வாக்கென்று நான் எழுதவும் வேண்டுமோ? எல்லா இந்திய முஸ்லீம் மகா நாட்டு அக்கிராசனர் மிஸ்டர் ஜின்னாவும், விசேஷ காங்கிரஸ் அக்கிராசனர் லாலா லஜபதிராயும் இந்து முஸ்லிம் ஒற்றுமை பெரிதென்றும், பூஜிக்கத் தகுந்ததென்றும், அபிவிருத்தி செய்யக்கூடியதென்றும், அதுவே இந்தியாவின் முன்னேற்றத்திற்கு அடிப்பீடமென்றும் இந்தியர்களுக்குச் சுகத்தைக் கொடுக்குமென்றும் பகிரங்கம் செய்திருக்கிறார்கள். இம்மகான்கள் பகிரங்கம் செய்ததை இந்து-முஸ்லிம்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்வார்களாக.

கண்ணீர் வார்த்தவர்கள்

ஹிந்து முஸ்லிம் ஒற்றுமை என்கிற மரத்திற்கு விதை விதைத்தவர்கள் இந்தியாவின் தீர்க்கதரிசிகளாகும். அவர்களில் சிலர் பரமபத மடைந்து விட்டனர். இன்னும் சிலர் தாங்கள் விதைத்த விதை முளைத்துச் செடியாகி மரமாகி வளர்ந்து வருவதைக் கண்ணாரக் கண்டு மன மகிழ்ந்திருக்கிறார்கள். இந்த மரத்தை வேரோடு கெல்லி எறிய வேண்டுமென்று பலர் முயற்சிசெய்கின்றனர். அவர்களுடைய தீய முயற்சி பலிதமாகவில்லை. இன்னும் அவர்கள் தங்களுடைய தீய முயற்சிகளை விட்ட பாடில்லை. இந்துக்களும் முஸ்லிம்களும் சத்துருக்களின் முயற்சிகளுக்கு இடங் கொடுக்கக் கூடாதென்று லாலாலஜபதிராய் அவர்கள் எல்லோரையும் மன்றாடிக் கேட்டுக் கொண்டார்கள். நம் லஜபதியின் வேண்டுகோள் வீண் போகாதென்பது நிச்சயம். இஃதொரு புறமிருக்க அவர் தம் பிரசங்கத்தில் இந்து முஸ்லிம் ஒற்றுமையை அபிவிருத்தி செய்தவர்களின் தீரத் தன்மையைப்பஞ்சாப் படுகொலை விஷயமாக காங்கிரஸ் கமிஷனர்கள் விசாரணை செய்தபோது மிஸ்டர் மக்புல் முகம்மத் என்பவர் சாட்சியத்தினின்று கூறிய கீழ்க்கண்ட இரண்டு உதாரணங்களைக் குறிப்பிட்டிருக்கிறார். அவைகளை நேயர்கள் கவனிக்க வேண்டுகிறேன்.

"(1919) ஏப்ரல்" மீ 10ந் தேதி அமிர்தசரஸிலுள்ள பாலத்தின் மீது ஜனங்கள் வரும்போது போலீசாரால் சுடப்பட்டார்கள். சுட்டான பிறகு நான் பயங்கரமான காட்சிகளைக் கண்டேன். அவைகள் பரிதாபமாகவுமிருந்தன. ஒருவன் மண்டை தூள் தூளாகி விட்டது. அவன் கண்ணிலுள்ள பாபா தொங்கிக் கொண்டிருக்கக் கண்டேன். மற்றொருவன் இறக்கும் தருவாயில் இந்து-முஸல்மான்-கி-ஜேய் என்று கூக்குரலிட்டு உயிர் துறந்தான். பதினாறு பதினேழு வயதுள்ள ஒரு சிறுவன் சாகக் கிடந்தான். நானும் டாக்டர் தனபதிராயும் அவனிடம் சென்றபோது "நான் போகிறேன். என் சகோதரர்களுக்குச் சிகிச்சை செய்யுங்கள். ஹிந்து-முஸல்மான்-கி-ஜேய்" என்று சொல்லி விட்டுச் சில நிமிஷங்களுக்கெல்லாம் உயிர் துறந்தான். இந்த மாதிரி பலர் தாம் இறக்கும்போது சொல்லியதை நான் கேள்விப்பட்டேன்"

என்ற மிஸ்டர் மக்புல் முகம்மத் இந்து முஸ்லிம்களுக்கு அறிவித்ததைப் படித்த நம்மவர்கள் இனி என்ன செய்யப் போகிறார்கள்? என்று நான் கேட்கிறேன். ஹிந்து முஸல்மான்-கி-ஜேய் என்று சொல்லி இறந்தவர்களுடைய சக்தி எல்லா இந்து முஸ்லிம்களுக்கும் பரவட்டும். ஹிந்து முஸ்லிம் ஒற்றுமை விருத்தி யாகட்டும். இதனால் இந்தியா உலகத்தார் கண் முன் சுயராஜ்ய மடையட்டும்.

ஹிந்து-முஸல்மான்-கி-ஜேய்.

கல்விப் பகுதி.

எலிமெண்டரி உபாத்தியாயர்கள் இயக்கம்

1920 ஹு செப்டம்பர் மீ 9ம் தேதி மாலை 5-40க்குக் கிச்சிப்பாளையம் இந்து பாடசாலை கட்டிடத்தில் நிரந்தர அக்கிராசனாதிபதி Mr. R. இராமசுவாமி அய்யங்கார் அவை தலைமையின் கீழ் சேலம் முனிஸிபல் எலிமெண்டரி உபாத்தியாயர்கள் சங்கம் கூடியது. சங்கம் கூட்டின விஷயமும் அதன் நோக்கமும் அக்கிராசனாதிபதியவர்கள் முகவுரையில் சுருக்கமாய் விளக்கிக் காட்டினார். பின்பு சென்ற மீட்டிங்கில் நடந்த நடவடிக்கைகள் காரியதரிசியால் வாசிக்கப்பட்டு ரிகார்டு செய்யப்பட்டன. பிறகு பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. முக்கியமாக இச்சங்கத்திற்கு ஒரு நிதி ஏற்படவேணுமென்றும் சப்ளிமெண்டு பில் பாஸ் ஆனவுடன் ஒவ்வொரு மெம்பரும் ரூபாய் ஒன்று கொடுக்க வேணுமாயும் கூடிய சீக்கிரத்தில் ஜில்லா மகா நாடு ஒன்று கூட்ட வேணுமாயும் வெளியூர் சங்கத்தாரின் அபிப்பிராயத்தைக் கேட்க வேணுமாயும் தஞ்சை ஜில்லா எலிமெண்டரி உபாத்தியாய மகா நாட்டிற்கு 8 பிரதிநிதிகள் இச்சங்கத்திலிருந்து போக வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டன. ஜில்லா கான்பரன்ஸ் கூட்டுவதற்குத் தாமதமின்றியில் ஒவ்வொரு சங்கத்தாரும் தங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவிக்க வேணுமாய் கோரப்படுகிறார்களென்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

எலிமெண்டரி உபாத்தியாயர்கள் கூட்டம்.

கோரடாச்சேரி.

சுமார் 60 உபாத்தியாயர்கள் 11-9-20ல் போர்டு ஸ்கூலில் கூத்தாநல்லூர் முகமதிய பாடசாலைத் தலைமை உபாத்தியாயர் ஸ்ரீமான் அப்பாசாமி அய்யர் அக்கிராசனத்தின் கீழ் கூடித் தங்களுக்கு ஜீவாதாரமான விஷயங்களைப்பற்றிப் பேசினார்கள். சங்கக் காரியதரிசி Mr. R. சுப்பிரமணிய ஐயர் பொதுவாய் உபாத்தியாயர்களின் இயக்கத்தைப் பற்றியும், பத்திரிகைகள் உபாத்தியாயர்கள் நிமித்தம் உழைத்துவருவதால்தான் அதிகம்பரவ காரணமாகிறதென்றும் சொல்லி நமக்காக உழைக்கும் சிலமுக்கிய பத்திரிகைகளைக் குறிப்பிட்டு ஆதரிக்கவேண்டுமென்றும் சொன்னார். ஆனந்த போதினியிள்ள ஸ்ரீமான் பரிமணப் பல்லவராயருடைய வியாசம் வாசிக்கப்பட்டது. பிறகு அங்குப் பிரசார வேலை நிமித்தம் ஆஜராயிருந்த ஜில்லா சங்கக்காரியதரிசி கான்பரன்சு விஷயமாய் பேசி 'சமரசபோதினி' பத்திரிகையில் கல்விப்பகுதியில் சம்பள விஷயதாரதம்மியத்தைக்காட்டும் குறிப்பு வாசித்துக் காட்டி பம்பாயில் சமீபத்தில் முன்சிபல் தோட்டி முதலானோர்கேட்கும்சம்பளவிகிதத்தையும் தெரிவித்துச் சம்பளமும்கிராண்டும்எலிமெண்டரி ஸ்கூல் உபாத்தியாயர்களுக்குக் கொடுக்கப்படுவதைப்பற்றி விவகரித்தார்.

ஜில்லா கான்பரன்ஸு

கான்பரன்ஸுவைத்து நிர்வகித்தல் சாமானியமானதல்லவென்றும் அதற்கானசெலவு ஏராளமாகுமென்றும்மற்றும்எலிமெண்டரிஸ்கூல் உபாத்தியாயர்கள்எல்லோரும்டெலிகேட்டுகளாக வந்து ஆதரித்தல் வேண்டுமென்றும் ஒற்றுமை வேண்டுமென்றும் விஸ்தாரமாகச் சொன்னார். உடனே எல்லா உபாத்தியாயர்களும் ஒரு மனதாய் டெலிகேட்டு டிக்கட்டு வாங்கக் கூடாதென்றுத்தீர்மானித்து விட்டனர்

டெலிகேட் எலக்ஷன்.

சுமார் 45பேர் ரிஸப்ஷன் கமிட்டி மெம்பராயும், பலர் டெலிகேட்டுகளாயும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். ரூ 20 அவ்விடத்திலேயே கொடுத்து கான்பரன்ஸுக்கு அனுப்புமாறு தெரிவித்தார்கள் பிறகு இரண்டு தீர்மானங்கள் செய்யப்பட்டு மேலாவுக்கு அனுப்பப்பட்டன. எல்லோருக்கும் வந்தனமளிக்கப்பட்டு மீட்டிங்கும் முடிந்தது. ஜீவ

குறிப்புகள்.

ஸ்ரீயுத அரவிந்த கோஷ் பிரஞ்சு நாடாகிய சந்திர நாகூரிலிருப்பதாகவும், அவர் "ஸ்டாண்டர்ட் பேரர்" (கொடி தூக்குவோன்) என்னும் பத்திரிகையை வெளியிட்டுக் கல்கத்தாவுக்கு விற்பனைக்கு அனுப்புவதாகவும் சொல்லப்படுகிறதென்று பம்பாய் கிரானிகிளின் கல்கத்தா நிருபர் அறிவிக்கிறார்.

* *

1919-20-ம் வருஷத்தில் பம்பாய் மாகாணத்தில் மொத்தம் 208 புது கம்பெனிகள் ஏற்படுத்தப்பட்டனவென்றும், சராசரியாக ஒரு கம்பெனியின் மூலதனம் 64 லட்சம் ரூபாயென்றும், தற்காலம் ஐரோப்பியர்களால் நடத்தப்படும் கம்பெனிகள் மொத்தம் 229 என்றும் தெரிகிறது.

* *

இந்த வாரம் பாகு என்ற விடத்தில் கூடும் போல் ஷிவிக்கர்களின் மகா நாட்டில் "பிரிட்டிஷ் சம்பந்தத்தினின்று இந்தியாவை விலக்குவது" என்ற விஷயத்தைப்பற்றி யோசித்து வழிதேடுவதற்காக டெல்லி, கல்கத்தா, சென்னை, பம்பாய், பூனா, பர்ஷியா, ஆப்கானிஸ்டான் முதலிய விடங்களிலிருந்து பிரதிநிதிகள் வருவார்களென்று எதிர்பார்க்கப்படுவதாக ஸ்டேட்ஸ்மென் லண்டன் நிருபர் அறிவிக்கிறார். பிரதிநிதிகள் யாரோ?

* *

லா சங்கக் காரியதரிசி 19. 9. 20ல் அம்மாப்பேட்டை போவார் என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

இலிப்பிலி உபாத்திமைச் சங்கம்
(திருச்செங் கோடு தாலூகா)

11 9 20 பிற்பகல் நாமக்கல் ரேஞ்சு எலிமெண்டரி உபாத்தியாயர்கள் சங்கக்காரியதரிசியாகிய ஸ்ரீமான் N. சென்ன கிருஷ்ணன் அவர்களது அக்ராசனத்தின் கீழ் சங்கம்கூட்டப்பட்டு வழக்கம்போல் விஷயங்கள் நடந்தேறிய பின் அக்ராசனர் தமது பின்னுரையில் உபாத்தியாயர்கள் தங்களைத் தாங்களே எவ்விதம் சீர்திருத்திக்கொள்ள வேண்டும் என்பதைப்பற்றியும் தங்கள் குறைகளை வெளியிட்டுக்கொள்ள ரேஞ்சு சங்கம் அவசியமென்பதைபற்றியும் இதை ஜில்லா, மாகாணச் சங்கங்களோடு இணைத்துக்கொள்ளவேண்டிய அவசியத்தைப்பற்றியும் மற்றும் முன்னேற்றத்துக்குரிய பல விஷயங்களையும் தக்க ஆதாரத்துடன் எடுத்துக்காட்டினார். சமாசபோதினிபத்திரிகையின்மூலமாக தங்கள் குறைகள் நிவர்த்தியாகும் வண்ணம், ஆசிரியர் விஷயங்களை பிரசுரித்து வருவதற்குத் தங்கள் மனமார்ந்த வந்தனத்தையும் நன்றியறிதலையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறார்களென ஒர் உபாத்தியாயர் எழுதுகிறார்,

---

தஞ்சாவூர் தாலூகா கிராமாதிகார உத்தியோகஸ்தர்கள் சங்கம் 1-வது ஆண்டு நிறைவு விழாக்கொண்டாட்டம் செப்டம்பர் மாதம் 19-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை பகல் 11மணிக்குத் தஞ்சைத்தெற்குராஜவீதி வி. எம். ஸ்கூலில்நாகப்பட்டணம் ராவ்பகதூர் கே. எஸ். வெங்கிடராமய்யர் அக்கிராசனத்தில் நடைபெறும். அவ்வமயம் தஞ்சை ஜில்லா கிராம உத்தியோகஸ்தர்கள் சங்கக் கூட்டமும் சென்னை மாகாண கிராம உத்தியோகஸ்தர்கள் சங்கக் கூட்டமும் நடைபெறும் என்று காரியதரிசி எழுதுகிறார்.

* *

பவானி தாலூகா குமாரப்பாளையம் ஸ்ரீமான் வேங்கடரமண பாகவதர் அருப்புக்கோட்டை சௌவுண்டம்மன் கோவிலுக்கெதிரில் நடைநொடி பாவனைகளுடன் திரௌபதி வஸ்திராபஹரணம் என்னும் பாகத்தை ஆவணி மீ 18-ந் தேதி ஓர் அரிய காலட்சேபம் செய்தார். இதைக்கேட்ட பக்த கோடிகள் ஆனந்தத்தில் மூழ்கினார்களென்றும் இவருடைய திறமையை மெச்சி அவருக்குத்தங்கள் சக்திக்கியன்றளவுபரிசளிக்க முயற்சிகள் செய்யப்படுகின்றனவென்றும்மிஸ்டர் ஜி. வி. சுகப்பிர்ம்மம் எழுதுகிறார்.

* *

பிராமணரல்லாதார் மகா நாடொன்று அக்டோபர் மீ 9, 10-ந் தேதிகளில் நாகப்பட்டணத்தில் நடைபெறும். மிஸ்டர் வி. பக்கிரிசாமிபிள்ளை வரவேற்புக் கூட்டத் தலைவராக விருப்பர். ராய் பகதூர் கே. வி. ரெட்டி நாயுடு அவர்கள் மகா நாட்டு அக்கிராசனராகத் தெரிந்தெடுக்கப்படுவர் ஒரு கால், அவருக்கு அசௌகரியமிருந்தால் மிஸ்டர் ஏ. இராமசாமி முதலியார் அக்கிராசனம் வகிக்கவேண்டப்படுவர். மதுரை மிஸ்டர் பி. டி. இராஜன் என்பவர் ஆசார சீர்திருத்த மகா நாட்டுக்கு அக்கிராசனம் வகிக்கத் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

* *

சென்னை மாகாண காங்கிரஸ் கமிட்டி பிரிஸிடெண்ட் ஸ்ரீமான். எஸ். கஸ்தூரிரங்க ஐயங்கார், அதன் நிர்வாகக் கமிட்டியில் அங்கத்தினர்களான ஸ்ரீமான்கள் வி. ஆர். ஸ்ரீநிவாசய்யங்கார், ஏ. ரங்கசாமி ஐயங்கார், காரியதரிசிகளான ஸ்ரீமான்கள் எஸ். சத்தியமூர்த்தி, ஏ. ஆர். துரைசாமி ஐயங்கார் முதலியவர்கள் தங்கள் தங்கள் ஸ்தானங்களை, விசேஷ காங்கரஸ் ஒற்றுழையாமைத் தீர்மானம் நிறைவேற்றியிருப்பதால், ராஜிநாமா செய்துவிட்டார்கள்.

* *

கிராம முன்சீப்புக்களும், கர்ணங்களும் எந்தெந்த வட்டத்[illegible]ச்சார்ந்தவராயிருந்தாலும் அவர்கள் அந்தந்த வட்டத்திலேயே குடியிருக்கவேண்டுமென்று ஒரு விசேஷ உத்தரவு இந்தத் தாலூகா டிப்டி கலெக்டர் பிறப்பித்திருப்பதாக ஒரு நிருபர் எழுதுகிறார்.

* *

1921-ம் வருஷம் ஜனவரி மாதம் 10-ந்தேதி கானாட்டுக் கோமகன் சென்னைக்கு விஜயம் செய்வார். 15-ந் தேதியன்று சென்னையைவிட்டுப் புறப்படுவார்.

இந்தியாவுக்குத் திரும்பிக்கொண்டிருக்கும் கிலாபத் தூதர்கள் எமீர் பஸாலுடன் வெகுநேரம் பேசிக்கொண்டிருந்தனரென்றும் உறுமான கலிபாவின் பெயரை ஹெட்ஜாஸ் பிரதேசம் பூராவினும் குத்பாவின் போது உச்சரிக்க வேண்டுமென்றும் துருக்கியருக்கும் அராபியருக்கும் ராஜி யேற்படவேண்டுமென்றும் கிலாபத் தூதர்கள் அச்சமயம் வற்புறுத்தினார்களென்றும் எமீர் பஸால் அவ்வாறே ஏற்பாடு செய்ய முயலுவதாக பதிலளித்ததாகவும் ஒரு செய்தி அறிவிக்கிறது.

* *

ஜாம்ஷெட்பூரிலுள்ள டாடா இரும்புத் தொழிற்சாலையில் வேலை செய்யும் சில ஐரோப்பியத் தொழிலாளிகள்சென்றசனிக்கிழமை இரவு வேலை நிறுத்தஞ் செய்துவிட்டனர். அந்தத் தொழிலாளிகளின் வேலைகளையெல்லாம் இந்தியத் தொழிலாளிகள் செய்து வருகின்றனர்.

எலக்ஷன் விவரம்.

சென்னைச் சட்டசபைக்கு அங்கத்தினர்களைத் தெரிந்தெடுக்கும் பொதுத் தொகுதி வோட்டர்களும் நிலச் சுவான்தார் தொகுதி வோட்டர்களும் கவனிக்கவேண்டிய விஷயமாவது:-

பொதுத்தொகுதி.

இப்போது பொதுத் தொகுதி வோட்டர்களின் ஜாபிதாவும் நிச்சுவான்தாரர்வின் வோட்டர்களின் ஜாபிதாவும் வெளியிடப்பட்டிருக்கின்றன. பொதுத்தொகுதி வோட்டர்கள் தங்கள் ஆட்சேபங்களையும் கோரிக்கைகளையும் இம்மாதம் 20-ந் தேதிக்குள அறிவித்துக்கொள்ளவேண்டும். பிறகு அவைகள் சேர்க்கப்பட்டு 25-ந்தேதிக்குள் வெளியிடப்படும் பரீசிலனை அதிகாரிகள் இவைகளை மேற்பார்வையிட்டபிறகு முடிவான ஜாபிதா அக்டோபர் 25-ந் தேதி வெளியிடப்படும். கடைசியாக எலக்ஷன் நவம்பர் மாதம் 30-ந் தேதி நடைபெறும்.

நிலச்சுவான்தார்களின் தொகுதி.

ஆட்சேபனைகளை அறிவித்துக்கொள்ளல் இம்மாதம் 19-ந் தேதிக்கு முன்பாக; ஆட்சேபனைகள் கவனிக்கப்பட்டு மறுபடியும் வெளியிடுவது செப்டம்பர் 22-ந் தேதிக்கு முன்பாக; முடிவான ஜாபிதா அக்டோபர் 29-ந் தேதிக்கு முன்பாக.

இராஜப் பிரதிநிதி சட்டசபை பொதுத் தொகுதி.

வோட்டர்களின் ஆட்சேபனைகளைத் தெரிவித்துக்கொள்ளல் செப்டம்பர் 20-ந் தேதிக்கு முன்பாக; அவைகளைச் சேர்த்து வெளியிடல் 25-ந் தேதிக்கு முன்பாக; முடிவான ஜாபிதா வெளியிடப்படும் தேதி அக்டோபர் 25-ந் தேதிக்கு முன்பாக.

விசேஷத் தொகுதி.

வோட்டர்களின் ஜாபிதா விஷயமாக ஆட்சேபனைகளை அறிவித்துக்கொள்ளல் செப்டம்பர் மீ 19-ந் தேதிக்கு முன்பாக, அவைகளைச் சேர்த்து வெளியிடல் 22-ந் தேதிக்கு முன்பாக முடிவான ஜாபிதா வெளியிடல் அக்டோபர் மீ 20-ந் தேதிக்குள்ளாக; எலக்ஷன் நவம்பர் 30-ந் தேதி.

விசேஷ காங்கரஸ்.

ஒற்றுழையாமை அங்கீகரிக்கப் பட்டது.

இரண்டு கட்சி யாகாமல் தப்பித்தது.

தலைவரின் போராட்டம்.

(நமது விசேஷ நிருபரிடமிருந்து)

கல்கத்தா, 10—9—20.

"இந்த முறை காங்கரஸ் கல்கத்தாவில் பிழைத்தது" "காங்கரஸ் பிளவாகாமல் தப்பித்தது" என்று பெருமூச்சுவிட்டுச் சொல்லிக்கொண்டு பிரதிநிதிகளில் பலர் சென்ற வியாழக்கிழமை மாலை பந்தலினின்றும் அகமகிழ்ச்சியுடன் வெளியே வந்தார்கள். காங்கரஸ் கட்டாயம் ஒற்றுழையாமை விஷயத்தில் இரண்டுபடுமென்று அநேகமாக எல்லாப் பிரதிநிதிகளும் தலைவர்களும் கடைசி நிமிஷம் வரையில் எதிர்பார்த்தார்கள். இதற்கேற்ப ஆங்கிலோ இந்தியப் பத்திரிகையான "இங்கிலீஷ் மான்" பத்திரிகையும் ஒரு விஷம வியாசமெழுதி, அதில் ஒற்றுழையாமைத் தீர்மானத்தை ஆட்சேபிக்கிறவர்கள் காங்கரஸைவிட்டுப் பிரிந்து மிதவாதிகளோடு சேருவது நலமென்றும் அல்லது தனியே ஒரு சங்கத்தை ஏற்படுத்திக்கொள்வது விசேஷமென்றும் குறிப்பிட்டிருந்தது. நல்லவேளையாகத் தேசியக் கட்சித் தலைவர்கள் "ஆத்ம புத்தி சுகம் சைவ" என்றதை மனதிலிறுத்திப் பெருமையாக நடந்துகொண்டது பாராட்டத்தக்கதாகும். காங்கரஸ் கூடிய நாள் தொட்டு நம் சத்துருக்கள் பல சூழ்ச்சிகள் செய்து பார்த்தார்கள். கடைசியில் அவர்கள் ஏமாந்து போய்விட்டார்களென்று சொல்லலாம். இனியேனும் அவர்கள் காங்கரஸைப் பிளவுப்படுத்தத்தீயமுயற்சிகள் செய்யாமலிருக்கவேண்டுகிறேன்.

விஷயாலோசனைக்கமிட்டி

விசேஷ காங்கரஸ் விஷயாலோசனைக் கமிட்டியார் ஒற்றுழையாமை அல்லது உதவி மறுத்தல் தீர்மானமொன்றையே கடந்த நான்கு நாட்களாக அடிக்கடி கூட்டங்கூடி சுமார் 30 மணி வரையில் ஆலோசித்தனர். மற்ற விஷயங்கள் அதிகமாகக் கவனிக்கப்படவில்லையென்று சிலர் வருந்தினர். இவ்வர்கள் வருந்தியது அநாவசியமாகும். ஒற்றுழையாமைத்தீர்மானம் விஷயாலோசனைக் கமிட்டியில் மிக்க பலமாக வாதிக்கப்பட்டது. மகாத்மா காந்தி யொருபுறமும் மற்ற தலைவர்கள்—மிதவாதிகளைத் தவிர—மற்றொரு புறமும் பிரமாதமாக குஸ்தி—கைகுஸ்தியல்ல, வாய் குஸ்தி — போட்டுக்கொண்டார்களென்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். அவர்கள் எவ்வாறு வாதம் செய்தார்கள்? அங்கு யாரார் எப்படி யெப்படிப் பேசினார்கள்? என்பவைகளையும் மற்ற நடவடிக்கைகளையும் பத்திரிகைகள் இரகசியமாக வைத்துக்கொண்டிருக்கவேண்டுமேயன்றி அவைகளை வெளியிடுதல் பத்திரிகை நடத்தும் தர்மத்துக்கு விரோதமாகும். பொதுவாக ஒரு சங்க விஷயாலோசனைக் கமிட்டியின் நடவடிக்கைகளை எந்தத் தேசத்திலும் பத்திரிகைகள் வெளியிடுவது கிடையாது. அந்தச் சங்க அங்கத்தினர்களும் விஷயாலோசனைக் கமிட்டியில் நடந்த விஷயங்களை இரகசியமாக வைத்துக்கொண்டிருப்பது சம்பிரதாயமாகும். இந்தச் சம்பிரதாயத்தையும், சங்க அங்கத்தினர்களின் நலத்தையும் கருதி இந்தியன் நாஷனல் காங்கரஸ் கூட்டத்தார் கடந்த பல வருஷங்களாக நடந்துவந்திருக்கின்றனர். இப்பொழுது இரண்டொரு வருஷகாலமாகக் காங்கரஸ் விஷயாலோசனைக் கமிட்டியில் நடந்த விவரங்களைச் சில பத்திரிகைகள் வெளியிட்டுவரும் துஷ்ட வழக்கத்தைக் கைப்பற்றிக்கொண்டு வருகின்றன.

நல்ல பிழைப்பு!

சென்ற வருஷம் அமிர்தசரஸ் காங்கிரஸின் விஷயாலோசனைக்கமிட்டியின் நடவடிக்கைகளைச் சில பத்திரிகைகள் வெளியிட்டனவென்பதையும் அவைகளைக் கண்ணுற்று, கனம்பண்டிட் மோதிலால் நேரு காங்கரஸ் பந்தலில் பத்திரிகா நிருபர்களையும் அப்பத்திரிகைகளையும் சாட்டையடி அடித்தார்களென்பதையும் நேயர்கள் நன்கறிவார்கள். அப்பொழுது சொன்ன புத்திமதியைச் சில பத்திரிகைகளும் நிருபர்களும்இன்னும் கவனித்து நடவாமல் நல்ல பிழைப்புப் பிழைத்துவருகிறார்கள். விஷயாலோசனைக் கமிட்டியில் பத்திரிகா நிருபர்களுக்கு இடமில்லாமலிருக்கும்போது எங்ஙனம் அங்கு நடந்த நடவடிக்கைகள் பத்திரிகைகளில் வெளியாகும்? என்று சிலர்வினவலாம். சில பத்திரிகைகளின் ஆசிரியர்களே விஷயாலோசனைக் கமிட்டியில் அங்கத்தினர்களாயிருந்து கொண்டு அதன் நடவடிக்கைகளைத் தங்கள் பத்திரிகைகளுக்குத் தந்தி மூலமாக அனுப்பிப்பிரசுரம் செய்திருக்கிறார்கள். எட்டாந்தேதி காலை மெயிலில் சென்னையினின்றும் வந்திறங்கிய பத்திரிகைகளில் விசேஷ காங்கரஸ் விஷயாலோசனைக் கமிட்டி நடவடிக்கைகள் யாவும் "ஹிந்து" விலும் "சுதேசமித்திர"னிலும் பிரசுரமாயிருப்பதைப் பார்த்துப் பிரதிநிதிகளில் பல மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் முக்கியமாக வங்காளப் பிரதிநிதிகள் திடுக்கிட்டு ஆச்சரியமடைந்தார்கள். இவ்விஷயம் வரவேற்புக் கூட்டத் தலைவர் மிஸ்டர் சக்கரவர்த்தியிடம் அறிவிக்கப்பட்டதென்று கேள்விப்பட்டேன். இப்பத்திரிகையின் ஆசிரியர்கள் விஷயாலோசனைக் கமிட்டியில் அங்கத்தினர்களாயிருந்தார்களாகையால், ஒருகால் இது இவர்களுடைய செய்கையாயிருக்கலாமென்று ஊகிக்கப்பட்டது. எனினும், இப்பத்திரிகைகள் பொதுச்சங்கக்கூட்டத்தின் சம்பிரதாயத்தை அறிந்திருந்தும் விஷயாலோசனைக் கமிட்டியின் நடவடிக்கைகளைப் பிரசுரித்ததானது தகாத காரியமென்று நான் சொல்லத் துணிகிறேன்.

தலைவர்களின் பகீரதப் பிரயத்தனங்கள்

காங்கரஸ் தலைவர்களில் கொஞ்சம் பிரமுகம் வாய்ந்தவர்கள் ஒற்றுழையாமைத் தீர்மானம்நிறைவேறாமலிருக்கும் வண்ணம் எவ்வளவோபகீரதப் பிரயத்தனங்கள் செய்து பார்த்தார்கள். மகாத்மா காந்தியோடு சமாதானப் பேச்சுகள் பேசலானார்கள். ஒன்றும் முடியாமற் போனது பற்றி புதன் கிழமை பகல் காங்கரஸ் கூடியதும் ஒருவர் பின் ஒருவராக ஒற்றுழையாமைத் தீர்மானத்திற்குப் புதிது புதிதாகத் திருத்தப் பிரரேபணைகளைக் கொண்டுவரலானார்கள். முதன் முதல் மாஜி வங்காள ஹைகோர்ட் ஜட்ஜ் ஸர். அஸுடோஷ் சௌதிரி விசேஷ காங்கரஸ் விஷயம் டிசம்பர் மாதத்தில் கூடும் காங்கரஸில் கவனிக்கப்படலாமென்றும், ஆகவே காங்காஸ் தள்ளிவைக்கப்படவேண்டுமென்றும் ஒரு திருத்தப் பிரரேபணை கொண்டுவந்தார். இதைத் திவான் வி. பி. மாதவராவ் ஆமோதித்துப் பேசினார். இந்தப் பிரரேபணை ஓட்டுக்கு விடப்பட்டதும் தோற்றுப்போய் விட்டது.

மகாத்மா காந்தியடிகள்

தமது ஒற்றுழையாமைத் தீர்மானத்தைப் பெருத்த ஆரவாரங்களுக் கிடையில் பிரரேபித்தார். தீர்மானத்தின் சாராம்சமாவது:—

கிலாபத் விஷயத்திலும் பஞ்சாப் விஷயத்திலும் இந்தியாகவர்ன்மெண்டாரும் ஏகாதி பத்திய பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரும் நியாயம்செய்யத் தவறிவிட்டபடியால், அந்தஇரண்டுதவறுதலை நிவர்த்திசெய்து இனி இவை போன்ற அக்கிரமங்கள் நாட்டில் ஏற்படாமலிருக்க முழு சுயராஜ்யம் ஏற்படுத்தப்படவேண்டுமென்று இந்தியன் நாஷனல் காங்கரஸ் அபிப்பிராயப்படுகிறது. மேற்குறிப்பிட்ட தவறுகள் நிவர்த்தி செய்யப்படும் வரையிலும், தேசத்தில் முழு சுயராஜ்யம் ஏற்படுத்தப்படும் வரையிலும் அதிக சிரமமின்றிப் பரித்தியாகம் செய்ய காங்கரஸ் கீழ்க்கண்ட ஒற்றுழையாமை முறைகளைக் கையாளவேண்டுமென்று ஆரம்பார்த்தமாக முதன் முதலில் படித்த வகுப்பார்களைக் கேட்டுக்கொள்ளுகிறது.

(ஏ) பட்டதாரிகள் பட்டத்தையும், கவுரவ உத்தியோகஸ்தர்கள் தங்கள் உத்தியோகத்தையும் விட்டுவிடவேண்டும். (பி) கவர்ன்மெண்டு தர்பார்களுக்கும் பட்டச்சூட்டு வைபவங்களுக்கும்மற்றும் நடக்கக் கூடிய கச்சேரிகளுக்கும் போக மறுத்துவிடவேண்டும். (ஸி) சர்க்கார் பள்ளிக்கூடங்களையும் சர்க்கார் உதவிபெற்ற பள்ளிக்கூடங்களையும், கலாசாலைகளையும் பஹிஷ்காரம்செய்து தேசியப் பள்ளிகளும் கலாசாலைகளும் ஸ்தாபிக்கவேண்டும். (டி) வக்கீல்கள் தம் உத்தியோகத்தைவிட்டு அவர்களுடைய உதவியால் பிரத்தியேகமான நியாய சபைகள் ஏற்படுத்திப் பற்பல சச்சரவுகளையும் தீர்க்கவேண்டும். (இ) மெஸபொடேமியாவில் குமாஸ்தாக்களாகவும், கூலிகளாகவும், சிப்பாய்களாகவும் வேலை பார்க்க மறுத்துவிடவேண்டும். ஆள் சேர்ப்போரிடம் இதைக் கண்டிப்பாய்த் தெரிவித்துவிடவேண்டும், (எப்) புதிய சட்டசபைகளுக்கு நடக்கப்போகும் எலக்ஷனில் சம்பந்தப்படாமல் அபேட்சகர்கள் விலகிவிடவேண்டும்; காங்கிரஸின் யோஜனைக்கு மாறாக அபேட்சகர்களாய் நிற்போருக்கு வோட்டர்கள் வோட்டுக் கொடுக்கமறுத்துவிடவேண்டும். (ஜி) அன்னிய நாட்டுச் சரக்குகளைப் பஹிஷ்காரம் செய்யவேண்டும். இவைகளுடன் சுதேசியத்தைத் தீவிரமாக மேற்கொள்ளவேண்டும்.

மேற்கண்ட தீர்மானத்தைப் பிரரேபித்தபோது மகாத்மாகாந்தி கடவுளுக்குப் பயந்தும் தேசத்திற்குத்தாம் செய்ய வேண்டிய கடமையை முன்னிட்டும் பேசுவதாகப் பீடிகையிட்டுக்கொண்டு வெகு உருக்கமான பிரசங்கத்தைச்செய்தார். அவர் பேசியவைகளில் முக்கிய கருத்துக்களை மாத்திரம் நேயர்கள் மனதில் வைத்துக் கொள்ளவேண்டிக் கீழே குறிப்பிடுகிறேன்:—

நண்பர்காள்! நான் கொண்டுவந்திருக்கும் தீர்மானத்தை எதிர்த்துப்பேசப் பலர் தயாராயிருக்கிறார்கள். அவர்கள் எப்படியாகிலும் இத்தீர்மானத்தைத் தோற்கடிக்கவேண்டுமென்று ஒரே உறுதியாயிருக்கிறார்கள். இத்தீர்மானம் நிறைவேற்றப்படுவதாலுண்டாகும் கஷ்டங்களையும் என் பொறுப்புகளையும் நான் உணர்ந்திருக்கிறேன். நான் சந்நியாசத்தன்மை உடைத்தாயிருப்பதாகச் சிலர் கூறுகின்றனர்; நான் அமுல் செலுத்தவேண்டுமென்று கருதுவதாகவும் வேறு சிலர் சொல்லுகின்றனர். நான் சந்நியாசியுமல்ல; நான் அமுல் செலுத்த வேண்டுமென்று விரும்பவுமில்லை. உங்களுடைய ஹிருதயத்திற்கும் புத்திக்கும் நான் விண்ணப்பம் செய்கிறேன். ஒத்துழையாமை இயக்கம் தேசத்திற்குப் புதிதென்பதை நான் அறிவேன். முன் யோசனையில்லாமல் இவ்விஷயம் இங்குக்கொண்டுவரப்படவில்லை; இதுவரையில் பலவிடங்களில் பல கூட்டங்களில் பேசப்பட்டிருக்கிறது. இது நிறைவேற்றப்பட்டால் இதை ஆமோதிக்கிறவர்கள் ஒவ்வொருவரும் செய்கையில்செய்து காண்பிக்க வேண்டும். தேசத்து ஜனங்களைத் தியாகத்திலும் ஒழுங்கிலும் பழக்கவேண்டியே இதுகொண்டுவரப்பட்டிருக்கிறது. இதுமுடியாதகாரியமல்ல. சிலர் நான் காங்கிரஸைப் பிளவுபடுத்த வந்திருப்பதாகக் குறைகூறுகிறார்கள்.

எல்லோருக்கும் சொந்தம்

காங்கரஸ் ஒரு கட்சியினருடைய சொத்தல்ல; மிதவாதிகளுடையது மல்ல; தேசியக்கட்சியினருடையதுமல்ல; எல்லாக்கட்சியினர்களுக்கும் சொந்தமானது, அது தேசிய சபையாகும். மைனரிடியாயிருப்பவர்கள் காங்கரஸைவிட்டு ஓடவேண்டாம். இன்று மைனரிடியாயிருப்பவர்கள் காங்கரஸிலிருந்து கொண்டே நாளை மெஜாரிடியைத் தன்பக்கம் திருப்பிவிடலாம். நான் ஒருகால் இந்தக் காங்கரஸில் மைனரிடியாயிருக்க நேரிட்டால், காங்கரஸை விட்டோடமாட்டேன். இதிலிருந்துகொண்டே வேலை செய்வேன்.

கௌரவம்போய்விட்டது

கிலாபத் விஷயத்தில் முஸ்லிம்களின் கௌரவம் போய்விட்டது. எந்தப்பாடுபட்டாலும் அவர்கள் தங்கள் இழந்துபோன கௌரவத்தை நிலைநிறுத்தவேண்டும். பஞ்சாப் அநியாயமாகவும் மிருகத்தனமாகவும் நடத்தப்பட்டது; சரியாக நியாயம் செய்யப்படவில்லை. பஞ்சாபின் கௌரவத்தை நிலைநிறுத்த முயற்சி செய்யாமல் காங்கரஸ் எவ்வாறு ஜீவிப்பது? நான் கொண்டுவந்திருக்கும் ஒத்துழையாமைத்தீர்மானமேசரியானதாகும். மற்றவைகளை நிராகரித்துவிடுங்கள் நீங்கள் எல்லோரும் நான் கொண்டுவந்திருக்கும் தீர்மானப்படி அனுஷ்டித்தீர்களேயானால், ஒருவருஷத்தில் சுயராஜ்யம் கிடைத்துவிடுமென்பதை நான் தைரியமாகச் சொல்லுகிறேன். தேசத்தின் நிலைக்குத்தக்கபடி ஒத்துழையாமைப்படிகள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன.

பரித்தியாகம்வேண்டும்

ஒத்துழையாமையைத் தவிர மற்றொரு வழியிருக்கிறதென்றாலும் (அதாவது கத்தியெடுத்துச்சண்டை போடுதல்) இந்தியர்களிடம் கத்திகிடையாது. அஃதொருகால் இருந்தால் என் பேச்சை ஜனங்கள் கேட்கமாட்டார்கள். நியாயம் கொடுக்காமலிருக்கிறவர்களிடம் முரட்டு உபாயங்களால் நியாயத்தைப் பிடுங்க வேண்டுமானாலும் பரித்தியாகமும் ஒழுங்காகநடந்து கொள்ளுதலும் அவசியமாகும். யுத்தமென்றாலும் ஒழுங்குவேண்டும். ஒழுங்கில்லாமல் யுத்தத்தில் எந்தத் தேசமும் வெற்றி பெற்றது கிடையாது. ஒவ்வொரும் அவரவர்களுக்கு இட்ட வேலையில் உயிரைக் கொடுக்கக் கூடியவர்களாயிருக்கவேண்டும். அந்த மாதிரியானநிலைக்கு நான் என் தேசத்தைக்கொண்டுவர உத்தேசித்திருக்கிறேன். நான் சுயராஜ்யம் வேண்டுமென்கிறேன். நமக்குப் பரித்தியாகம் அவசியம். குடும்பகாரியங்களில் எவ்வளவோ ஒழுங்காகவும் பரித்தியாகமுடையவர்களாகவிருக்கிறோம். அவைகளைச் சமூகவாழ்க்கையிலும் கொண்டுவர வேண்டும்.

இந்து முஸ்லிம் ஒற்றுமை

இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் உண்மையான ஒற்றுமையிருக்கிறதென்பதை நானறிவேன். நான் இதையே பெரிதாகக் கவனிப்பேன். இந்தியாவின் கௌரவம்தான் மற்றெல்லாவைகளைக்காட்டிலும் எனக்கு முக்கியமானது. உங்களுக்கு உண்மையாக இஸ்லாத்தின் கௌரவம் உயர்ந்ததென்றுதோன்றினால் பஞ்சாப் விஷயத்தில் அநியாயம் செய்யப்பட்டதென்று நீங்கள் எண்ணினால் அந்த நிமிஷமே என தீர்மானத்தை ஆமோதிப்பீர்கள்.

சட்டசபை பகிஷ்காரம்

சட்ட சபை பகிஷ்காரம் அவசியம் செய்யப்பட வேண்டும். உங்களுக்குச் சுயராஜ்யம் வேண்டுமோ? வேண்டாமா? சட்ட சபையினால் சுயராஜ்யம் பெற்று விடலாமென்று நினைக்கிறீர்களா? பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் தாங்கள் செய்த பிழையைப்பற்றி வருத்தப்படவில்லை. இங்ஙனமிருக்கும்போது சீர்திருத்தங்களைநம்புவதில் என்ன பிரயோஜனம்? அது உங்களை இன்னும் பந்தப்படுத்துமேயன்றி வேறொன்றுமில்லை. ஆதலால் சட்ட சபையை அடியோடு பகிஷ்காரம் செய்துவிட வேண்டும்.

அந்நிய சாமான்களை விலக்கல்

முதன் முதலில் இந்த விஷயத்தை நான் கொண்டு வரவில்லை. தீர்மானத்தோடு சேர்க்கப்பட வேண்டுமென்று விஷயாலோசனைக் கமிட்டியில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இப்பொழுது எல்லா அந்நிய சாமான்களையும் விலக்க முடியாது. குண்டூசிக்கும் ஊசிக்கும் நாம் பிற நாடுகளை எதிர்பார்த்திருக்கும் காலம் வரையில் அந்நிய சாமான்களை அடியோடு விலக்க முடியுமென்று நான் சொல்ல மாட்டேன். ஆனால் தேசத்தினர்கள் ஒரே பிடிவாதமாக எழுந்து அந்நிய சாமான்களைப் பகிஷ்காரம் செய்ய முன் வந்தால் கண்ணை மூடித் திறப்பதற்குள் நீங்கள் சுய ராஜ்யத்தையடைந்து விடலாம்.

ஜனப் கிச்சிலு

சென்ற வருஷம் பஞ்சாப் கலகத்தின் போது வெளியேற்றப்பட்ட ஜனப் கிச்சிலு அவர்கள் ஹிந்தியில் தீர்மானத்தை ஆமோதித்து மிக உருக்கமாகப் பேசி இது அவசியம் நிறைவேற்றப்பட வேண்டுமென்று மன்றாடினார்.

எதிர்பார்த்த பிரேரபணைகள்

பண்டிட் ஜி. என். மிச்ரா என்பவர் மகாத்மா காந்தியின் தீர்மானம் காங்கரஸின் கொள்கைக்கு விரோதமென்று கூறி அதை எதிர்த்துப் பேசினார்.

"மூன்று மாதத்தில் சுயராஜ்யம்"

மிஸ்டர் சியாமலால் நேரு என்பவர் ஒருதிருத்தப் பிரேரபணை கொண்டு வந்து அதில் "கிரமேண" என்ற பதத்தை நீக்கிவிட்டு மகாத்மாகாந்தியின் தீர்மானம் அரைகுறையென்றும், வக்கீல்களை மாத்திரம் பாதிக்கக்கூடியதாயிருக்கிறதென்றும் எல்லோரையும் பாதிக்க வேண்டுமென்பதற்காக "வரிசெலுத்தக் கூடாது; உத்தியோகஸ்தர்கள் ராஜிநாமா செய்து விடவேண்டும்" என்ற வார்த்தைகளையும் தீர்மானத்தில் சேர்க்க வேண்டுமென்றும் இவ்வார்த்தைகள் சேர்த்தால் தான் தீர்மானம் சரியானதாயிருக்கு மென்றும், மூன்று மாதத்தில் சுயராஜயம் கிடைத்து விடுமென்றும் சொன்னார். மிஸ்டர்சிமன்லால் இதைஆமோதித்து அதிகாரவர்க்கத்தினர்களோடு இந்தியர்கள் ஒரு விவகாரமும் வைத்துக் கொள்ளக் கூடாதென்று குறிப்பிட்டார். பிரேரபணை ஓட்டுக்கு விடப்பட்டதும் தோற்றுப் போய் விட்டது.

பாபுவிபின சந்திரபாலர்

மகாத்மா காந்தியின் தீர்மானத்திற்கு ஒரு திருத்தப் பிரேரபணை கொண்டுவந்தார், அதாவது:—

"இந்தியா கவர்ன்மெண்டாரும் ஏகாதிபத்திய பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரும் சென்ற வருஷம் ஏப்ரல் மீ பஞ்சாபில் அக்கிரமம் செய்த அதிகாரிகளை தண்டிக்காமலிருந்து விட்டபடியாலும் அவ்வக்கிரமங்களுக்குக் காரணராயுள்ள ஸர்மைகல் ஓட்வியரை விட்டு விட்டபடியாலும் இந்தியர்களிடம் அனுதாபமில்லாமல் பஞ்சாபில் பயமுறுத்தியாட்சிசெய்யப்பட்ட முறைகளை ஆதரித்தபடியாலும் இந்தியாவிலுள்ள ஐரோப்பியர்களில் பெரும்பாலோர் மேற்கண்ட முறைகளை ஆதரித்துக் குற்றம் செய்த அதிகாரிகளைச் சன்மானிக்கிறபடியாலும், கிலாபத் விஷயத்தில் உறுதி மொழிகளை நிராகரித்துப் பிரதம மந்திரி நடந்துகொண்டபடியாலும், துருக்கி உடன்படிக்கைபிரகாரம் அனுஷ்டானத்திற்குக் கொண்டுவருதல் இந்தியாவுக்கு ஆபத்தை யுண்டாக்குமென்றும், இந்த அக்கிரமங்கள் இனிநிகழாமலிருக்க இந்தியாமுழுசுயராஜ்யம் வழங்கப்பட வேண்டுமென்றும் இவைகளை முன்னிட்டு எல்லா இந்தியக்காங்கரஸ் கமிட்டியாரால் தெரிந்தெடுக்கப்பட்ட (a) இந்தியப் பிரதிநிதிகள் பிரிட்டிஷ் பிரதம மந்திரியாரைப் பேட்டிகண்டு இந்தியாவின் குறைகளைக் கூறுவதோடு அவர் இந்தியாவுக்கு முழு சுயராஜ்யத்தை யளிக்கவேண்டுமென்று கேட்கப்பட வேண்டுமென்றும் (b) ஒருகால் பேட்டி கொடுக்க முடியாதென்றாவது அல்லது சீர்திருத்த சட்டத்தை மாற்றி சுயராஜ்யம் கொடுக்கமுடியாதென்றாவது கூறிவிட்டால், ஒத்துழையாமை முறைகள் அனுஷ்டிக்கப்பட வேண்டுமென்றும், இதன் மத்தியில் மகாத்மா காந்தியடிகளின் ஒத்துழையாமை முறைகளை அனுஷ்டானத்திற்குக் கொண்டு வருவதன் பொருட்டு ஒரு ஆலோசனை ஜாயிண்ட் கமிட்டி ஏற்படுத்தப்பட வேண்டுமென்றும், இந்தக்கமிட்டி விசாரணை செய்து முடிக்கும் வரையில் ஆரம்பார்த்தமாக வரி செலுத்தும் ஜனங்களுக்கு ஒற்றுழையாமையைப் போதித்தல் (2) தேசியப்பள்ளிக்கூடங்களை ஏற்படுத்துதல், (3) பஞ்சாயத்து கோர்ட்டுகளை ஸ்தாபித்தல் (4) கவர்ன்மெண்டார் கொடுத்த கௌரவ உத்தியோகங்களை விட்டுவிடுதல், (5) கவர்ன்மெண்ட் விருந்துக்கச்சேரிகளுக்கும் தர்பார்களுக்கும் போகாமலிருத்தல் (6) தொழிற் சங்கங்களை ஸ்தாபித்தல் (7) ஐரோப்பியர்களுடைய பாங்கிலிருந்து கிரமேண பணத்தை எடுத்தல்; ஐரோப்பிய கம்பெனிகளில் வேலை செய்யும் தொழிலாளர்களையும் நீக்குதல் (8) இந்தியாவைத்தவிர்த்து அந்நிய நாடுகளில் வேலைக்குத் தொழிலாளகளும் குமாஸ்தாக்களும் சிப்பாய்களும் போகாமலிருத்தல் (9) சுதேசிய விரதத்தைக் கைப்பற்றுவதோடு கைத்தறி நெசவுகளை விருத்தி செய்தல் முதலியவைகளை இக்காங்கரஸ் உடனே அனுஷ்டானத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்று தீர்மானிக்கிறது"

இந்தப் பிரேரபணையை பாபுவிபின சந்திரபாலர் கொண்டுவந்து மிகவும் வற்புறுத்திப் பேசி மகாத்மா காந்தியின் தீர்மானப்படி ஜனங்கள் இப்போது நடக்கமுடியாதென்று குறிப்பிட்டார். இதை மிஸ்டர் ஜோஸப் பாப்டிஸ்டாவும் கல்கத்தா தேசபக்தர் மிஸ்டர் ஸி. ஆர். தாஸும் ஆமோதித்து ஆதரித்தும் பேசினார்கள்.

'கொஞ்சம் பொறுங்கள்'

மிஸ்டர் ஸி. ஆர். தாஸ் பள்ளிக்கூடங்களுக்குக் குழந்தைகளைப் போகாமலிருக்கச் செய்வது முடியாத காரியமென்றும் அவ்வாறு செய்தால் ஒரு வேலையுமின்றி மாணவர்கள் தீய காரியங்களைச்செய்யநேரிடுமென்றும்வக்கீல்கள்கோர்ட்டுக்குப் போகாமலிருப்பது தற்சமயம் முடியாத காரியமென்றும், பஞ்சாயத்துக்கோர்ட்டுகளும்தேசியப் பள்ளிக்கூடங்களும் ஏற்படுத்தப்படும் வரையில் கொஞ்சம் பொறுத்திருக்க வேண்டுமென்றும் பள்ளிக்கூடங்களினின்று மாணவர்களை இழுப்பதும் கோர்ட்டுகளுக்கு வக்கீல்கள் போகாமலிருப்பதும் கிரமேண செய்யப்படலாமென்று மாற்றப்பட்டிருப்பதுபோல சட்டசபையையும் கிரமேண பகிஷ்காரம்செய்யலாமென்றும்எவ்வளவோ மன்றாடி வற்புறுத்தினார்.

ஸ்ரீ அனிபெஸண்ட்

மகாத்மா காந்தியின் தீர்மானத்தையும் பாலரின் திருத்தப்பிரேரபணையையும் எதிர்த்துப்பேசி ஒத்துழையாமையினால் பல கெடுதிகளுண்டாகுமென்றும் கவர்ன்மெண்டைத் தோற்கடிக்க முடியாதென்றும் ஜனங்களுக்குப் பெருத்த கஷ்டங்களுண்டாகுமென்றும் குறிப்பிட்டார் பிறகு மிஸ்டர் ஜம்னாதாஸ் த்வாரகதாஸ்பேசி தீர்மானத்தையும் திருத்தப் பிரேரபணையையும் எதிர்த்தார்.

சுயகௌரவமுள்ளவர்கள்

சட்டசபைக்குப்போக மாட்டார்களென்றும் சட்டசபைக்குள் புகுந்தால் அது கவர்ன்மெண்டுக்கு வெற்றியென்றும் சொல்லி மகாத்மா காந்தியின் தீர்மானத்தைக் கனம் நேரு ஆதரித்துப்பேசினார் மௌலானா அப்துல்காலம் ஆஸட் தீர்மானத்தை ஆதரித்தார். இன்னும் இதை ஆதரித்துப்பேசியவர்கள் மெஸர்ஸ் சென்னை மாகாணம் யாகுப் ஹாஸன், டெல்லி டாக்டர் அன்சாரி, கல்கத்தா ஜிதேந்திரலால்பானர்ஜி, பஞ்சாப் ராம் பஜதத்சௌதிரி ஆந்தரதேசம் கோபாலகிருஷ்ணு முதலியவர்களாகும்.

“தயாராயில்லையாம்”

ஒத்துழையாமைக்கு ஜனங்கள் தயாராயிருக்கிறார்களென்று வெகுநாள்வரையில் தம்பட்டமடித்த மிஸ்டர் சத்தியமூர்த்தி ஜனங்கள் ஒத்துழையாமைக்குத் தயாராயில்லை யென்று காங்கரஸில் வந்து பேசிவிட்டார். மகாத்மாகாந்தி தீர்மானம் பிரயோஜனமற்றதென்று பகிரங்கம் செய்தார். சட்டசபையைப் பகிஷ்காரம் செய்யக்கூடாதென்று கூறி மிஸ்டர் பாலரின் திருத்தப் பிரரேபணையை ஆதரித்தார். பிறகு மெஸர்ஸ் பம்பாய் வாசியான ஜயகரும் ஜின்னாவும் காந்தியின் தீர்மானத்தை எதிர்த்துப் பாலரின் பிரரேபணையை ஆதரித்துப் பேசினார்கள். கடைசியாக பிரரேபணையை பண்டிதர் மதன் மோகன் மாளவ்வியா ஆதரித்துப்பேசினார். அப்போது அவர் பேசியவற்றில் முக்கிய அம்சங்களை மாத்திரம் கீழேகுறிப்பிடுகிறேன்:—

பஞ்சாப் விஷயத்திலும் கிலாபத் விஷயத்திலும் கவர்ன்மெண்டார் அநீதமாக நடந்து கொண்டனர். இந்தியர்களுடைய கௌரவமும் மதிப்பும் அலட்சியம் செய்யப்பட்டு விட்டன. ஒத்துழையாமை தற்காலத்திற்கு முற்றிலும் நியாயமான முறையாகும். பஞ்சாப் அக்கிரமங்களுக்குக் காரணமானவர்கள் இன்னும் கொஞ்சமாதங்களில் இந்தியாவைவிட்டுப் போய்விடுவார்கள். லார்ட் செம்ஸ்போர்டு அடுத்தவருஷம் ஏப்ரல் 3ந்தேதி போய்விடுவர். நான் வெகுகாலம் இதைப்பற்றி யோசித்துப் பார்த்தேன். முழு சுயராஜ்யமிருந்தால் அக்கிரமங்கள் ஏற்படாதவாறு செய்யலாம். நாம்முழுசுயராஜ்யம் பெறவேண்டுமானால் அதிதீவிரமாகக் கிளர்ச்சி செய்யவேண்டும். பலமுள்ள பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் ஒன்றுக்கும் அஞ்சமாட்டார்கள். வக்கீல்கள் கோர்ட்டுக்குப் போகாமலிருந்தால் கவர்ன்மெண்டுக்கு ஒரு கஷ்டமுமில்லை. சட்டசபையைப் பகிஷ்காரம் செய்யக்கூடாது. திலகர் பெருமான் சட்டசபைக்குப்போய் கிளர்ச்சிசெய்து முழு சுயராஜ்யம் பெறவேண்டுமென்று கூறியிருக்கிறார். திலகர் முன்யோசனையுடன் கூறியுள்ளார். முழுசுயராஜ்யம் பெறுவதற்குக் காலம் நெருங்கிவிட்டது. கஷ்டங்களிருக்கின்றன. இதனால் நான் கிலாபத் விஷயத்தைக் குறைத்துப் பேசுவதாக நினைத்தல் கூடாது. கொஞ்சம் யோசித்துப் பொறுமையுடன் காரியங்கள் செய்யலாம். அரசதந்திரங்களை உபயோகிக்க வேண்டும் அவசரப்படக்கூடாது. பள்ளிக்கூடங்களினின்று பிள்ளைகளை இழுக்கக்கூடாது. பஞ்சாயத்துக் கோர்ட்டுகள் ஏற்படுவதற்குள்ளாக வக்கீல்கள் கோர்ட்டுகளைப் பகிஷ்காரம் செய்யக்கூடாது. மகாத்மாகாந்தி விரும்புவதெல்லாம் ஜனங்களுடைய கோபத்தைக் கவர்ன்மெண்டாருக்கு அறிவிப்பதாகும். வேறுமுறையில் ஜனங்களுடைய கோபத்தைக் கவர்ன்மெண்டாருக்குத் தெரியப்படுத்தலாம். மகாத்மாகாந்தியின் தீர்மானத்தைவிட மிஸ்டர் பாலின் திருத்தப் பிரரேபணை காலத்துக் கொத்ததாயிருப்பதால் நான் பாலரின் பிரரேபணையையே ஆதரிக்கிறேன்.

மகாத்மா காந்தியின் பதில்

தீர்மானத்திற்கு விரோதமாகவும் சாதகமாகவும் எல்லோரும் பேசி முடித்த பிறகு, மகாத்மா காந்தி பாதகமாகப் பேசியவர்களுடைய ஆட்சேபணைகளுக்கு ஆணித்தரமான பதில் சொன்னார். அதன் சாராம்சமாவது:—

என் தீர்மானத்திற்கு விரோதமாகப் பேசியவர்களுடைய ஆட்சேபணைகளை நான் கவனித்து வந்தேன். அவர்கள் சொல்லியவைகள் ஒன்றேனும் சரியானதாக எனக்குப்படவில்லை. ஆனால் அவர்கள் சொல்லியவைகளை நான் குறைத்துப் பேசவில்லை.

இத்தீர்மானப்படி அனுஷ்டிப்பது சாத்தியமில்லையென்று மெஸர்ஸ் ஜின்னாவும் தாசும் சொன்னார்கள். சாத்தியப்படுமென்றே நான் நம்பியிருக்கிறேன். அநேகம் பேர் அதைரியப்படுவதை முன்னிட்டே மாணவர்களைக் கிரமேண பாடசாலைகளினின்று இழுக்கலாமென்றும், கோர்ட்டுகளைக் கிரமேண பகிஷ்காரம் செய்யலாமென்றும் தீர்மானத்தில் சேர்க்கப்பட்டன. என் தீர்மானப்படி ஒத்துழையாமைச் சாத்தியமில்லையென்று சொல்லுவதை நான் நம்பமாட்டேன்.

என்ன பயன்?

முதன் முதலில் தேசியப் பள்ளிக்கூடங்களையும் பஞ்சாயத்துக் கோர்ட்டுகளையும் ஏற்படுத்திக்கொண்டு மாணவர்களைப் பள்ளிக்கூடங்களுக்குப் போகாமலிருக்கச் செய்யலாமென்றும் அப்புறம் வக்கீல்கள் கோர்ட்டுகளைப் பகிஷ்காரம் செய்யலாமென்றும் சொல்லுகின்றனர். இவ்வாறு சொல்வது எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது. மாணவர்களில்லாமல் பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தி என்ன பிரயோஜனம்? பின்னர் பஞ்சாயத்துக் கோர்ட்டுகளை ஏற்படுத்தினால் தானென்ன பயன்? ஒரு தேசம் மற்றொரு தேசத்தாரோடு யுத்தமிட்டுக்கொண்டிருக்கும்போது மாணவர்களின் படிப்பு கொஞ்ச காலம் நிறுத்தப்படவில்லையா? மாணவர்கள் கவர்ன்மெண்ட் பள்ளிகளுக்குப்போகாமலிருந்தால்தான் நாம் கோரிய காரியம் நிறைவேறும். வேண்டுமென்றால் வேரிலும் காய்க்கும். அவசியம் மேற்பட்டால் எல்லாப் பள்ளிக்கூடங்களும் தானாகவே ஏற்படும். இந்தியாவின் பெருமையைப்பற்றி மாணவர்கள் அறிய வேண்டுமே யன்றி அவர்கள் அடிமைகளாகப் போகும் படிப்பைக் கற்பிக்கக்கூடாது.

திலகரும் ஒத்துழையாமையும்!

திலகர் ஒத்துழையாமைக்கு விரோதமென்றும் சட்டசபையைப் பகிஷ்காரம் செய்யமுடியாதென்று சொன்னதாகவும் சிலர் கூறினார்கள். நானும் மௌலானா சௌக்கத்தலியும் திலகர் இறப்பதற்குப் பதினைந்து நாட்களுக்கு முன்பு அவரைப் பார்க்கப்போயிருந்தோம். அப்போது அவர் முஸ்லிம்கள் ஒத்துழையாமையை அனுஷ்டித்தால் தாமும் தம் கட்சியினரும் முஸ்லிம்களைப் பின்பற்றுவதாக மௌலானா சௌக்கத்தலியிடம் உறுதி கூறினார். முஸ்லிம்கள் ஒத்துழையாமையை அனுஷ்டிக்கத் தயாராயிருக்கும்போது ஏன் திலகர் கட்சியினர் திலகர் சொல்லுக்கு மாறாகப் போகவேண்டும்? திலகர் சட்ட சபைக்குப் போய் அரிய சேவைகளைச் செய்யவில்லை. சட்டசபைக்கு வெளியேயிருந்துகொண்டு லட்சக்கணக்கான ஜனங்கள் மதித்துக்கொண்டாடும்படியான அரிய தன்மைகளைச் செய்தார்.

“நம்பினது வீண்”

பஞ்சாப விஷயத்தில் அதிகாரிகள் தாங்கள் செய்த அக்கிரமங்களைப்பற்றி வருந்துவார்களென்று நினைத்து அமிர்தசாஸ் காங்கரஸில் ஜனங்கள் கவர்ன்மெண்டாரோடு ஒத்துழைக்கவேண்டுமென்றேன். பிறகு கவர்ன்மெண்டின் போக்கு என்னை மாற்றிவிட்டது. பிரிட்டிஷார் இந்தியர்களைப் பயமுறுத்துகின்றனர். இதற்கு நாம் அஞ்சுவது கூடாது. கவர்ன்மெண்டின் கண் திறக்கப்படுவதற்கு நாம் ஒத்துழையாமையைக் கைக்கொண்டு சட்டசபைக்குப் போகாமலிருக்க வேண்டும்.

முஸ்லீம்களின் தீர்மானம்

முஸ்லிம்கள் எல்லா இந்திய முஸ்லிம் லீக் மகா நாட்டில் ஒத்துழையாமையை நிறைவேற்றி விட்டனர். தேசத்தில் நாலில் ஒரு பங்கினர் ஒருவிதமாகவும் அதற்கு நேர்விரோதமாக மற்றவர்களும் சென்றால் தேசத்தில் அமைதியிருக்குமா? கிலாபத் விஷயம் பிரதம மந்திரியின் உறுதிமொழிகளுக்கு மாறாக முடிவு செய்யப்பட்டிருப்பதை நீங்கள் உண்மையாக நினைத்தீர்களானால், முஸ்லிம்கள் சென்ற வழியே நீங்களும் செல்லவேண்டும். இந்தியாவின் க்ஷேமத்திற்கு இந்து முஸ்லிம் ஒற்றுமை அவசியமாகவிருக்கிறது. இது வளர வேண்டுமே யன்றி மங்கக் கூடாது.

“தயாராயிருங்கள்”

நான் சொல்லவேண்டியவைகளைப் பட்சபாதமின்றிச் சொல்லிவிட்டேன். இனி உங்களிஷ்டம். யோசனை செய்யுங்கள், யோசனை செய்தபிறகு இத்தீர்மானத்திற்கு வோட் கொடுங்கள். வோட் கொடுத்த பிறகு தீர்மானப்படி நீங்கள் நடக்கத் தயாராயிருக்கவேண்டும். நம் தேச முன்னேற்றத்திற்கு இந்த அற்ப தியாகத்தைச் செய்ய முன் வருவீர்களானால், இந்து முஸ்லிம் ஒற்றுமை பலப்படுவதோடு நம் தேசமும் முன்னுக்கு வரும்.

மகாத்மா காந்திக்கு வெற்றி

அக்கிராசனர் “மகாத்மா காந்தியின்” தீர்மானத்தை வோட்டுச்கு விட்டதும் பெரும்பாலோரால் தீர்மானம் அங்கீகரிக்கப்பட்டது. மகாத்மா காந்தி வெற்றி பெற்றார். காங்கரசுக்கு வந்திருந்த 5814 பிரதிநிதிகளில் மொத்தம் 2773 பிரதிநிதிகள் சாதகமாகவும் பாதகமாகவும் வோட்டு கொடுக்கவந்தார்கள். 1826 வோட்டர்கள் மகாத்மா காந்தியின் தீர்மானத்திற்கு வோட் கொடுத்தார்கள். 804 பேர் பாதகமாக வோட் கொடுத்தார்கள். 63 பேர் ஒரு கட்சிக்கும் வோட் கொடுக்காமல் சும்மாவிருந்துவிட்டனர். இந்தியாவிலுள்ள மொத்தம் 12 மாகாணங்களில் பீஹார், மத்திய மாகாணம் இவ்விரண்டும் தவிர மற்றப் பத்து மாகாணங்களும் தீர்மானத்தை ஆதரித்து ஒத்துழையாமைக்குத் தயாராயிருக்கின்றன.

தஞ்சாவூர் சப் கோர்ட்.

O. P. No. 35/1290.

இறந்த வைத்திலிங்க செட்டியாருக்கு வரவேண்டிய கடன் விஷயமாய்

பாஞ்சாலியாச்சி } மனுதார்.

R. அடைக்கலம் செட்டியவர் வகையறு } ரெஸ்பாண்டெண்ட்டு.

ஷெ மனுதார் அறிவிக்கிறதாவது:-பட்டுக்கோட்டை தாலூகா வேம்பங்குடியில் ஸ்திரவாசமாக இருந்து 1-8-19ல் இறந்துபோன வைத்திலிங்கசெட்டியாருக்கு வரவேண்டிய கடன் தொகையை வருவிக்க தனக்கு சக்செஷன் சர்ட்டிபிகேட்டு கொடுக்கவேணுமென்று ஷெயார் சம்சாரமான மனுதாரியால் மனுக் கொடுக்கப்பட்டு ஷெ மனு 17-9-20ல் விசாரணைக்கு போடப்பட்டிருக்கிறது. அது விஷயமாய் ஆக்ஷேபணையுள்ளவர்கள் ஷெ தேதியில் ஷெ கோர்ட்டில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம்.

Tanjore, 14-9-20. } S. PANCHAPAKESA IYER, Pleader for Petitioner

---

எல்லா இந்திய முஸ்லிம் மகா நாடு.

(நமது விசேஷ நிருபரிடமிருந்து.)

கல்கத்தா 8-9-20.

இம்மாதம் 7ந்தேதி காலை 9 மணிக்கு எல்லா இந்திய முஸ்லிம் லீக் கூட்டம் கல்கத்தா டவுன் ஹாலில் கூடியது. டவுன் ஹால் வாயில் படிகளிலும் மண்டபத்திலும், "இஸ்லாம் மதத்தின்கௌரவத்தைக் காப்பாற்றுங்கள்" "மத பக்தியுடனிருங்கள்" "இந்து முஸ்லிம் ஒற்றுமையை விருத்தி செய்யுங்கள்" என்று பெரிய எழுத்துக்களில் அச்சிட்டுப் பிரதிநிதிகள் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளும்படி நோட்டீசுகள் ஒட்டப்பட்டிருந்தன. இந்தியாவின் எல்லாப் பாகங்களிலிருந்தும் முஸ்லிம் பிரதிநிதிகள் விஜயம் செய்திருந்தார்கள். விஜயம் செய்திருந்த முஸ்லிம் பிரதிநிதிகளெல்லோரும் ஒரு முகமாய் கிலாபத் விஷயம் இந்திய முஸ்லிம்களின் விருப்பப்படி முடிவு செய்யப்பட வேண்டுமென்றும் அது செய்யப்படாத வரையில் கவர்ன்மெண்டாரோடு ஒத்துழையாமலிருக்க வேண்டுமென்றும் பேசிக்கொண்டார்கள். மகாநாடு கூடியதும் குர்ரான் படிக்கப்பட்டது. வரவேற்புக் கூட்டத் தலைவர்

மௌலானா அப்துல் ரவுப்

என்பவர் பிரதிநிதிகளையும் அக்கிராசனரையும் வரவேற்று உருது பாஷையில் ஓர் உருக்கமான பிரசங்கம் செய்தார். அது கிலாபத் விஷயத்தை ஆதியோடந்தமாகக் குறிப்பிட்டு எப்படி நேசக்கட்சியினர் துருக்கி நாடுகளைப் பகிர்ந்து கொள்ள முயற்சிகள் செய்கிறார்களென்பதையும், பிரதம மந்திரியார் தாம் கொடுத்த உறுதி மொழிகளுக்கு மாறாகப் போனதையும், இவர்களுடைய செய்கைகளினால் இஸ்லாம் ஆபத்திலிருக்கிறதென்பதையும் அவர் விரிவாகப் பேசினார். கிலாபத் விஷயம் திருப்திகரமாக முடிவு செய்யப்பட வேண்டுமானால் மத்திய கிலாபத் கமிட்டியார் ஆக்ஞாபித்துள்ள ஒத்துழையாமை யொன்றுதான் சரியான ஆயுதமென்று கோஷித்தார். முஸ்லிம்களாகப் பிறந்த ஒவ்வொருவரும் இஸ்லாத்தைக் காப்பாற்ற வேண்டி ஒத்துழையாமையை அனுஷ்டிக்கவேண்டுமென்று சொன்னார்.

அக்கிராசனர்

இம்மகாநாட்டுக்கு அக்கிராசனம் வகித்த மிஸ்டர் ஜின்னா தமது அக்கிராசனப் பிரசங்கத்தில் தற்கால நிலைமையையும் கிலாபத்தின் நிலைமையையும் இந்து முஸ்லிம்கள் செய்ய வேண்டிய காரியங்களையும் பற்றிக் குறிப்பிட்டார். யுத்தம் நின்ற பிறகு ரௌலட் சட்டம், பஞ்சாப் படுகொலை, துருக்கி நாடுகளைப் பிடுங்கிக் கொள்ளல் முதலிய காரியங்கள் ஒன்றன் பின் ஒன்றாகச் செய்யப்பட்டன வென்றும், இந்தியர்கள் இனி பொறுக்க முடியாதென்றும், இந்தியர்களுடைய நம்பிக்கையைக் கவர்ன்மெண்டார் இழந்து விட்டார்களென்றும், குடியேற்ற நாடுகளில் வெள்ளையர்கள் செய்யும் அக்கிரம காரியங்கள் சகிக்க முடியாதன வாயிருக்கின்றன வென்றும் பஞ்சாபில் செய்யப்பட்ட அநியாயங்களுக்கு நியாயம் வழங்கப்பட வில்லை யென்றும் கேவலம் தீர்மானங்கள் செய்தனுப்புவதால் பிரயோஜன மொன்றுமில்லை யென்றும், நமக்கு முழு சுய ராஜ்யம் கொடுக்கப்படாத வரையில் நாம் சும்மா விருக்கக் கூடாதென்றும் சொல்லி விட்டு மகாத்மா காந்தியின் ஒத்துழையாமையைப் பற்றிச் சொன்னார். இது விஷயமாகத் தீர்மானம் செய்தால், அதன் பிரகாரம் அனுஷ்டிக்க வேண்டுமென்று வற்புறுத்தி ஒவ்வொருவரும் யோசித்து ஒத்துழையாமை அனுஷ்டானங்களில் கையெழுத்திட வேண்டுமென்று பிரதிநிதிகளை வேண்டிக் கொண்டார்.

எச்சரிக்கை

பின்னர் சீர் திருத்தம், ஹண்டர் கமிட்டி ரிப்போர்ட் முதலியவைகளைப் பற்றிப் பேசி விட்டு ஜனங்களுடைய விருப்பத்திற்கு மாறாக காரியங்கள் செய்யப்பட்டு வருவது அபாயமென்றும் கவர்ன்மெண்டார் முரட்டுச் செய்கைகள் செய்து ஜனங்கள் ஏக்க மடையும்படி செய்யக்கூடாதென்றும் பிரதிநிதிகளுக்கு அறிவுறுத்தினர். மகாத்மா காந்தியவர்கள் வெளியிட்டுள்ளபடி ஒத்துழையாமை முறைகள் அனுஷ்டிக்கப்படா விட்டாலும் வேறு எந்த முறையிலேனும் ஒத்துழையாமை அனுஷ்டிக்கும்படி நேரிடுமென்றும் கூறினர். கடைசியில் முஸ்லிம்களை எச்சரிக்கை செய்து இந்தியாவிலுள்ள 700 லட்சம் முஸ்லிம்களின் பிரதிநிதிகளாக வுள்ளவர்கள் கிலாபத் விஷயத்தில் யோசனை செய்து தக்கது செய்வதவசியமாகு மென்று முடித்தார்.

மிஸ்டர் ஜின்னா பிரசங்கத்தில் அறிந்து கொள்ள வேண்டிய விஷயங்களாவன:—

யுத்த காலத்தில் இந்தியர்களுடைய உதவி வேண்டப்பட்டபோது சுய நிர்ணயம் சுய ராஜ்யம் சுதந்தரம் என்று பேச்சுக்கள் கிளம்பின. இப்போது அவ்வார்த்தைகளைச் சொல்லுவோரில்லை. இந்தியர்களுடைய உதவி துருக்கியைப் பிளவு செய்ய உபயோகப்படுத்தப்பட்டது. இந்தியர்களுடைய உதவிக்குப் பிரதிப் பிரயோஜனம் ரௌலட் சட்டமாகும்!

*   *

துருக்கிய நாடுகளின் கதியென்ன? கான்ஸ்டாண்டி நோபில் நேசக்கட்சியினர்வசமிருக்கிறது. துருக்கி நாடுகளில் நேசத் துருப்புகள் படையெடுத்துச் சென்றிருக்கின்றன. கலிபா அதிகாரமற்று செய்யப்பட்டிருக்கிறார். துருக்கிக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் சமாதான உடன் படிக்கை நிபந்தனைகள் துருக்கியைக் கீழே அமுக்கி விடும்.

*   *

கடைசியாக ஒரு விஷயம் தெரிய வந்தது' இந்திய பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரை இன்டர் நேஷனல் விஷயங்களில்' நம்பலாகாதென்பதாகும்.

*   *

ஒரு விஷயம் நிச்சயமாகி விட்டது. அதிகாரவர்க்க ஆட்சி முறை பயனில்லை. முழு ஜனப்பொறுப்பாட்சி யொன்றே இந்தியர்களுக்கு வேண்டியதைக் கொடுக்கும்.

*   *

ஜனங்கள் அநீதிகளைச் சகித்துக் கொண்டிருக்க வேண்டுமென்று சொல்ல மாட்டேன். இன்னும் கவர்ன்மெண்டாரைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். ஜனங்கள் ஏக்கமடைந்து வழியொன்று மில்லை யென்று சொல்லும்படி ஒரு காரியத்தையும் செய்யக்கூடாது. கவர்ன்மெண்டார் தம் போக்குப்படியே நடந்து சென்றால் ஒத்துழையாமையைத் தவிர வேறு அவர்களுக்கு ஆயுதமில்லை யென்பதைக் கவர்ன்மெண்டார் அறிய வேண்டுகிறேன்.

தீர்மானங்கள்

எல்லா இந்தியக் கிலாபத் கமிட்டியார் ஆக்ஞாபித்தபடி மகாத்மா காந்தியடிகள் தயாரித்துள்ள ஒத்துழையாமைத் தீர்மானத்தை எல்லா இந்திய முஸ்லிம் லீக் கூட்டத்தார் மனப்பூர்வமாக ஆமோதித்திருக்கிறார்களென்றும் இத்தீர்மானப்படி கடவாத முஸ்லிம்களைப் பகிஷ்காரம் செய்ய வேண்டுமென்றும் தீர்மானங்கள் செய்யப்பட்டன. ஒரே மனதாகஒத்துழையாமை இயக்கத்தைப் பலப்படுத்திக்கிலாபத் விஷயம் திருப்திகரமாக முடிவு செய்யப்படும் வரையில் முஸ்லிம்கள் ஹிந்துக்களுடன் சேர்ந்து கொண்டு தீவிரக் கிளர்ச்சி செய்வதாகவும் தீர்மானிக்கப் பட்டது.

தஞ்சை டிஸ்டிரிக்டு கோர்ட்.

O. P. No. 171/1920.

பத்மநாபகனபாடிகள் } மனுதார்

சாமிநாதய்யர் 1 }
விஸ்வநாதய்யர் 2 } ரெஸ்பாண்டெண்டுகள்.

ஷை மனுதார் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பதாவது:—

ஷை மனுதாரின் சம்சாரமாகிய மைனர் குப்பம்மாளுக்கும் அவள் சொத்துக்கும் மனுதார் தன்னை கார்டியனாக நியமிக்கவேணுமென்று மனுகொடுத்து 21-9-20ல் ஈறங்கி போடப்பட்டிருக்கிறது. அது விஷயமாய் ஆக்ஷேபணையுள்ளவர்கள் ஷை தேதியில் ஷை கோர்ட்டில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாமென்பதை இதன் மூலமாய் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

Tanjore, }
9—9—20. } E. VARADA IYENGAR,
High Court Vakil

நகைத் தொழிற்சாலை

எங்களிடம் ஒரு தடவை வேலை கொடுத்துப் பாருங்கள். 30வரு அனுபோகம் பெற்றவர்கள். 1914வரு மதுரையில் நடந்த கண்காக்ஷியில் நமது மசன்னை கவர்னராகயிருந்த மாக்ஷிமை தங்கிய பெண்ட்லண்டு பிரபு அவர்களால் கிலாக்கிக்கப் பெற்றது. ஒவ்வோரு நகையும் நமது சொந்தப்பார்வையில் செய்யக்கூடியது.

எங்களிடத்தில் செயயக்கூடிய நகைகளுக்கு நங்களே உத்திரவாதம் இருப்போம்.

கு. கிருஷ்ணய்யர்
தங்கம் போன் நகைவிலை வியாபாரி
மால் வடம் போக்கி தெரு, மதுரை

மதுரை சேலைகள்.

சிவப்பு! புள்ளிசேலை ரூ. 7-8; 3 புள்ளிசேலை ரூ. 7-12; 7புள்ளிசேலை ரூ. 8; கருப்பு 1 புள்ளி சேலை ரூ. 8-4; 7 புள்ளிசேலை ரூ 8-12; இன்னும் டோரியா, சரிகை பட்டுதுப்பட்டாக்களும், சித்தாடைகளும், ரவிக்கைகளும், விலைக்குச் சரசமாய்கிடைக்கும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

விலாசம்:—

கெமிகலர் டிரேடிங் கோ,
27, ஜடாமுனித்தெரு, மதுரை

சென்ற வாரம் பரமகுடி வடகரை எமனேஸ்புரம் சௌராஷ்டிரர்களின் பொதுக் கூட்டம் ஸ்ரீநிவாச பெருமாள் சந்நிதியில் கூடியது. ஸ்ரீமான் வா. சு. கு. நாகய்யர் அக்கிராசனம் வகித்தார். மேற்படி சபையின் முன்னேற்றத்திற்கான விஷயங்கள் கவனிக்கப்பட்டுத் தீர்மானங்கள் செய்யப்பட்டன.

துருக்கி சமாதான உடன் படிக்கை செய்தி.

துருக்கி சமாதான உடன்படிக்கை விஷயமாய் நேசக்கட்சியார் எல்லோரும் சேர்ந்து தங்கள் தங்கள் தேவைகளையும் ஆசைகளையும் திருப்தி செய்து கொண்டு உடன்படிக்கை முடிவைத் துருக்கிக்கு அனுப்பினர். அதற்கு துருக்கியும் பதில் கொடுத்து விட்டதாக நேசக் கட்சியார் கூறுகின்றனர். ஆர்மீனியா, ஹெட்ஜாஸ், ஆதீனத்துக்குட் பட்டுள்ள மொராகோ, ட்யூனிஸ், லிபியா, ஈஜிப்டு, ஈஜியன் சமுத்திரத்திலுள்ள தீவுகள் முதலிய இவைகள் மீது தனக்கிருந்த ஆதீனத்தை இழந்து விடுவதாகவும், ஸிரீயா, மெஸபொடேமியா, பாலஸ்தீன், இவைகளின் பரஸ்வாதீனத்திற்கு இணங்குவதாகவும் ஸூயஸ் கால்வாய் ஸூடான் ஸைப்ரஸ், இவைகளின்மேல் பிரிட்டிஷார் கேட்கும் உரிமைகளைக் கொடுப்பதாகவும் ஸ்ட்ரெயிட்ஸ் கான்ஸ்டாண்டிநோபில்பிரதேசங்களை எல்லோருடைய பொதுபாத்தியத்துக்கும்விட்டு விடுவதாகவும், துருக்கி ஒப்புக்கொண்டு சொல்லுவதாகத் தந்திச்செய்திகள் கூறுகின்றன. ஆனால் "ஸ்மிர்னா" இவ்விரண்டின் சம்பந்தமாய் விதிக்கப்பட்டிருக்கும் நிபந்தனைகளுக்கு மட்டில் தான் சம்மதிக்க முடியாதென்றும் 'கிரிஸ்' தேசத்தார் ஸ்மிர்னாவிலிருந்து உடனே திரும்பிப் போய்விடவேண்டுமென்றும் துருக்கி கேட்பதாக அறிவிக்கப்பட்டது.

*   *

"ஸ்ட்ரெயிட்ஸ் கமிஷனில்" துருக்கி மெம்பர்களேயில்லாத விஷயமும் அதற்குக் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் ரீதியும் துருக்கியரசின் பலத்தைக்குறைப்பதாயிருக்கின்றன. மேலும்எப்பொழுதும் அபாயநிலையிலேயே அதை வைத்திருக்கும் படியானதாயுமிருப்பதால் அந்தக் கமிஷனைத் துருக்கி ஒப்புக் கொள்ளவில்லை; குறிப்பிட்ட பிரதேசதிலுள்ள கோட்டை முதலிய பந்தோபஸ்து ஏற்பாடுகளை யழித்துவிடவேண்டுமென்றும் அந்த பிரதேசத்துக்குள் நேசக்கக்ஷியார் துருப்புகளை ஸ்தாபித்து வைக்கத் தான் சம்மதிக்கவேண்டுமென்ற நிபந்தனைக்கும் உடன்பட வில்லையென்றும் தெரிகிறது.

*   *

கடைசியாக ஸ்வய ஆதீனம் பெறும் ஹெட்ஜாஸ் முதலிய நாடுகளிலும் துருக்கியரசருக்கு "காலிபா" ஹோதாவில் புண்யஸ்தலங்கள் மேலுள்ள அதிகாரம் சிறிதும் குறைக்கப்படக் கூடாதென்றும் கேட்டிருக்கிறது.

*   *

"ஸண்டேரிவ்யூ" என்ற பத்திரிகை சுருக்கமாயும் வியக்தமாயும் நேசக்கட்சியார் அனுப்பிய உடன்படிக்கைத் தீர்மானங்களைப் பற்றிச் சொல்லுவதென்னவென்றால், "துருக்கியருக்கு பித்ரு ஆர்ஜிதமாகக் கிடைத்த சொத்தை நேசக்கட்சியார் சண்டையை வியாஜமாய் கைப்பற்றினர். இங்கிலாந்து, தன்னோடு பாலஸ்தீனையும் மெஸபொடேமியாவையும் சேர்த்துக் கொள்ளப் பார்க்கிறது. பிரான்சு ஸிரியாவைத் தனதாகக் கைப்பற்றிக்கொள்ளுகிறது. ஆனால் ஆக்ரமித்துப் பங்குபோட்டுக் கொள்ளுகிறதென்று பச்சை வெட்டாய்ச் சொல்லாமல், உள்ள விஷயத்தை இனிமையாய்மறைத்து "மேண்டேட்" என்ற வேஷவார்த்தை உபயோகிக்கப்படுகிறது.

1,000 ரூபா இனாம்.

உலகப்பிரசித்திபெற்ற சாலா மிசிரி முறப்பா.

கவர்ன்மெண்ட் ரிஜிஸ்டர் ஆயிருக்கிறது.

இப்பண்டிதர் சென்ற 6-வருஷ காலமாகப் பாடுபட்டுக்கொண்டு வருகிறார்.



தினந்தோறும் ஆப்பிரிக்கா, பர்மா, சிலோன், பனாங், சிங்கப்பூர், இரங்கூன், கல்கத்தா, பம்பாய், ஹைதராபாத், மதறாஸ் முதலியஇடங்களிலிருந்து அநேகமாய் ஆர்டர்கள்வந்துகொண்டிருக்கின்றன. மேற்கண்ட முறப்பாவை உபயோகித்து குணமடைந்த சங்கதிகளுக்கும் அதன் பரிணாமத்தைப்பற்றியும் அநேக சர்டிபிகேட்டுகள் அனுப்பிக்கொண்டு வருகிறார்கள். எமக்கு கிடைத்திருக்கிற சர்டிபிகேட்டை பார்க்கவேண்டுமென்று விரும்புகிறவர்கள் தபால் மூலமாய் தெரிவித்தால் பிரியமாக அனுப்புகிறோம். சாலமிசிரி முறப்பா சாலமிசிரியால்செய்யப்படவில்லையென்றும், அல்லது சர்டிபிகேட்டைப் பொய்யென்றும் ரூபிக்கிறவர்களுக்கு 1000 ரூபாய் இனாம் கொடுக்கப்படும். அம்மாதிரியாக ரூபித்து மேற்கண்ட ரூபாயைக் கொடாதிருக்கும் பட்சத்தில் கோர்ட்டு மூலமாய் வசூல் செய்து கொள்ளலாம். இதுமனிதர்களுக்குப் பால்ய சேஷ்டைகளினாலும், துர் சகவாசங்களினாலும் ஏற்படக்கூடிய தாது நஷ்டத்தைக் கண்டிக்கப்பட்ட ஒருவித ஜீவரத்தினம்போலிருக்கின்றது. சாலாமிசிரி முறப்பா, அநேக விலையுயர்ந்த பதார்த்தங்களினாலும், அநேகவன மூலிகைகளாலும் தயார் செய்யப்பட்டிருக்கின்றது இதில் மத விரோதமான எவ்வித பதார்த்தங்களும் சேர்க்கப்படவில்லை. யாவரும் சாப்பிடலாம். வெள்ளி பஸ்பம், தாம்பிரபஸ்பம், தங்கபஸ்பம் எவ்வித பஸ்பங்களும் இதற்குமுன் நிற்காது. ஒருதரம வரவழைத்து பரீட்சித்துப் பார்த்தால் பின் தங்களுக்குகே தெரியவரும். "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்ற பழமொழிபோல் தேகத்தைக் காப்பாற்றிக்கொள்வது எல்லாருடைய கடமையாயிருக்கிறது. கிரயம் டப்பி 1-க்கு ரூ. 2—0—0. போஸ்டேஜ் டப்பி 1-க்கு அணா 8. 2 அல்லது 3 டப்பிக்கு அணா 12. ஆர்டர்கள் கொடுக்கப்பவர்கள் தங்கள் விலாசங்களை விபரமாகவும் தெளிவாகவும் எழுதவேண்டியது.

எங்கள் முறப்பாவை வாங்கப்பட்டவர்கள் டப்பியின்மேல் ரிஜிஸ்டராயிக்கப்பட்ட டிரேட் மார்க்கைப் பார்த்தும் அடியிற்கண்ட விலாசம் சரியாக இருக்கப்பட்டதைப் பார்த்தும் வாங்குகள். இல்லாவிடில் மோசம் போவீர்கள். ஒரு தடவை உபயோகித்தால் பூரணகுணமாகும் இரண்டு, மூன்று டப்பிகளை உபயோகித்தால் மரணகாலபரியந்தம் எவ்விதமான வியாதியும் அணுகாது. நமக்கு ஏஜண்டுகள் தேவையாயிருக்கிறது. இஷ்டமிருக்கும் பட்சத்தில் எங்கள் ரூல் சட்டத்தைக் தருவித்துப் பாருங்கள்,

டி. மன்னுலால்,டில்லிவைத்தியர்,சாலாமிசிரிமுறப்பா டிபோ,பெங்களூர் சிடி

சவரன் படைமருந்து.

எப்பேர்ப்பட்ட தீராத மேகப்படைகளையும், மேகரணங்களையும், வண்ணான் சிரங்கு பொறுக்க முடியாத நமைச்சல்களையும் 24 மணி நேரத்தில் கண்டிப்பாய் குணப்படுத்தும். குணமில்லையென்றால் பணம் வாபீஸ் செய்யப்படும். புட்டி 1.க்கு அணா 12. 3 புட்டிக்கு சார்ஜ் இனாம்.

சவரன் அண்டு கம்பெனி,

10, கச்சாலீஸ்வர அக்ரஹாரம், சென்னை.

சந்தாதாரர்களே !

சுமார் இரண்டு வருடகாலமாகத் தமிழ் நாவலர் அ. ரா. மாதவராய முதலியாரால் நடத்தப்பட்டு சன்மார்க்கபோதனை, பழமொழிகள், நாவல்கள், விகடங்கள், இவற்றுடன் வெளிவரும் குணபோதினி என்றமாதப்பத்திரிகையைஆயிரக்கணக்கான ஜனங்கள் வாசிக்கின்றனர். நீங்களும வாசியுங்கள்.

வருடசந்தா ரூபா 1—8—0.

குணபோதினி ஆபீஸ், பெங்களூர். (ச)

ஓம்:

மகத்வமுள்ள

மஹானால் கிடைத்த அருமையான மூலிகையும் தாயத்தும்.

குஷ்டம், க்ஷயம், மூலம், கிராணி, பிர்ம்மை பைத்தியம், இருமல், வலிப்பு, மூத்திர வியாதி, முதல் நாள்பட்ட சகலவித வியாதிகளும் பலவித கஷ்டங்களும் கவலைகளும் உடனே நீங்கும். புத்திரபாக்கியமில்லாதவர்களுக்கு 48 நாளில் கெர்ப்பம் உண்டாகும் மஹானுடைய உருபையால் மனம்போல் குழந்தை பிறக்கும் வேண்டியவர்கள் பதிலுக்கு (ஸ்டாம்பு) வைத்தனுப்பவும். அடுத்த தபாலில் சகல விபரமும் கிடைக்கும் எந்த தேசத்து ஸ்டாம்பும் அனுப்பலாம்.

எஸ். ஏ. கே. பிள்ளை,

மேட்டுப்பாளையம், கோயமுத்தூர் ஜில்லா, சவுத் இந்தியா.

நேர்த்தியான பிரின்டிங்

ஜி. எஸ். மணியா அண்டு கோ., தஞ்சாவூர்.

இவ்வச்சி யந்திரசாலையை மிஸ்டர் கோபால சாமிஐயரிடமிருந்து வாங்கி இப்போது மிஸ்டர் டி. எஸ். கிருஷ்ணாராவ் வெகு நன்றாகவும் கிரமமயாகவும் நடத்திவருகிறார். இந்த அச்சியந்திர சாலையில் தமிழ் இங்கிலீஷ் புஸ்தகங்கள், நோட்டீசுகள் விஸிடிங்கார்டுகள், கோர்ட் பெடிஷன்கள் மற்ற மனுபாரங்கள் சுத்தமாகவும் நேர்த்தியாவும் அச்சடித்துக் குறைந்தசார்ஜுக்கு வேலை செய்து கொடுக்கப்படும், முனிஸிபாலிடியார்களும் ஜில்லா போர்டார்களும், இந்த அச்சுக்கூடத்தின் நேர்த்தியான பிரின்டிங்கைக் கவனித்து இதில் அச்சுவேலை கொடுத்து வருகிறார்கள். குறித்த காலத்தில் வேலை செய்து கொடுக்கப்படும்.

சரக்கு நயம்! விலை சரசம்!!

எல்லாவித கெட்டிச் சாயபவுடர்கள்

நூல்களுக்கும் துணிகளுக்கும் பட்டு & சேலைகளுக்கும்சாயம் போடுவதற்கு நயமானது. காங்கோரேட், சிகப்பு, காசிகப்பு மரூன் கெட்டி ரோஸ் பட்டு ரோஸ், புதுக்கோட்டை சாயம், பட்டு புனு பச்சை மஞ்சள் ஆரஞ்சி முதலிய சாயபவுடர்கள் எல்லாவித அச்சிகட்டைகள் அச்சிக்கு வேண்டிய உப்புகாரங்களும் சாயம் போடப்பட்ட விதம் சொல்லி சகாயமான விலைக்கு மொத்தமாயும் சில்லரையாயும் விற்கப்படும். வேண்டியவர்கள் நேரிலும். வி. பி. மூலமும் பெற்றுக்கொள்ளலாம் காகிதம் எழுதுவோர் சரியான விலாசம் ஊர். மார்க்கம் ஸ்டேஷன தெளிவாய் எழுதவேண்டியது.

சி. ஆர். ராமய்யர் & ஸன்ஸ்,
சாயபவுடர் வியாபாரிகள்,
2/1276. பந்தடி 5-வது தெரு, மதுரை.

T. B. Jayasunker Davey
இயற்றிய
ரத்னப் பிரகாசம்.

நவரத்தினங்களின் குணங்கள், தோஷங்கள், பரீக்ஷை, நல்ல ரத்தினங்களை அணிவதனால் உண்டாகும் நன்மைகள் இவைகளைப்பற்றி கூறும் அபூர்வ நூல். விலை அணு 8.

Apply to:—
R. B. தவே அண்டு சன்ஸ்,
தஞ்சாவூர்.

இனிய நாவல்கள்.

பாலாமணி	2—0—0
மேனகா 1-ம் பாகம்	1—8—0
ஷை 2-ம் பாகம்	1—8—0
வஸந்த மல்லிகா	1—0—0
ராஜேந்திர மோஹனு	0—12—0
தென்னூர் கோலை	1—4—0

எங்களிடம் எல்லாவிதத்தமிழ்ப் புஸ்தகங்களும் இருக்கின்றன. உடனே கியாட்லாகுக்கு எழுதுங்கள். இனமாய் அனுப்பப்படும்.

சாரி அண்டு கம்பெனி,
தபால் பெட்டி 281, மதருஸ்.

என்னை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?

நான் ஸ்திரீ புருஷர்களின் உயிரைக்காக்கும் கைவல்ய நவநீதம். வாழ்க்கையின் சுகம், காதற்பெருக்கு, பரவச முதிர்ச்சி முதலானதுகளை ஊட்டுகிறவன்.
,, ஸ்திரி புருஷ லக்ஷணங்களையும், சரீர கோட்பாடுகளையும் விவரித்துக் கூறுபவன்.

அதனுல்தான்

சகலதேச வாலிபர்களும், ஸ்திரிகளும், புருஷர்களும் என்னை விரும்புகிறார்கள்,

நான்தான்

ஆநந்தமகிளா.

படங்களுடன் கூடியவன் விலை ரூ 1-0-0
சொற்ப பிரதிகளே கைவசமுள. தாமதிக்காமல் இன்றே எழுதுங்கள்.
விலாஸம்:—

பி. எஸ், ராய், புதுவை.

பெரிய கம்பெனி! நாணயமான சரக்குகள்!!

திருப்தியில்லாத சரக்குகள் திரும்பப் பெற்றுச் சுத்தமான பட்டு, சகாய விலை, புதுமாதிரியான பட்டுப்புடவைகள், ரவிக்கைகள், சால்வைகள், வெண்பட்டு வேஷ்டிகள், தாவணிகள், மலைபாளத்து முண்டுகள் முதலிய எல்லாப்பட்டு தினுசுகளும் கிடைக்கும். எந்தப் புதுமாதிரியும் செய்து அனுப்பலாம்.

புடவைகள் 20 முதல் 250 ரூபா வரை கிடைக்கும். ரவிக்கைகள் 3 முதல் 15 ரூபா வரையில் கிடைக்கும். வெண்பட்டு வேஷ்டிகள் 10×6 ஜோடி 20 முதல் 35 ரூபா வரையும் 9×6 ஜோடி 1-க்கு 18 முதல் 30 ரூபா வரை.

மறறும் எல்லா விபரங்களுககும் கேட்லாக் தருவித்துப்பார்த்துக்கொள்ளவும்

கேட்லாக் இனம்!

Manager.
Silk Pitamber Co.,
Dharanagar Street,
BENARES CITY.

விலாசம்:—
மானேஜர்,
பட்டு பீதாம்பர கம்பெனி,
காசி.

பெட்டியில் வைத்துப் பூட்டுங்கள்.



உங்கள் நகைகளையும் விலையுயர்ந்த சாமான்களையும் இந்த லட்சுமி டிரங்குப் பெட்டியில் வைத்துப் பூட்டுங்கள். எங்களுடைய தொழிற்சாலைகளில் தகுந்த வேலைக்காரர்களைக் கொண்டு ஸ்டீல் தகடுகளினுல் டிரங்குப் பெட்டிகள் செய்யப் படுகின்றன. கண்ணனூர் கொச்சி மைசூர், விசாகப்பட்டணம், கும்பகோணம் முதலியவிடங்களில் நடந்த தொழிற்பொருட் காட்சி சாலைகளில் தங்கப்பதக்கப் பரிசும் வெள்ளிப் பதக்கப் பரிசும் பெற்றிருக்கின்றன நமது தொழிற்சாலையில் செய்யப்படும் டிரங்குகளின் வேலைப்பாட்டையும் அழுத்தத்தையும் பற்றி யாவரும் மெச்சிப் பேசியிருக்கிறார். ஆர்டர்கள் கொடுத்தாலும் செய்து தருகிறோம். ஒரு முறை ஆர்டர் செய்து பாருங்கள்.

(கேட்லாக்குக்கு எழுதுங்கள்)

நாகப்பட்டணம் சுதேசி ஸ்டீல் டிரங்கு கம்பெனி, **Estd. 1906.**
தஞ்சாவூர்.

Printed at the Vartakamitran Press and published by E. Suryanarayana Aiyar B. A., B. L., at 2109 Yellaiamman koil Street, Tanjore.